ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 8	ஸர்வதாரி ௵ தை ௴	ஸஞ்சிகை 1

“அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥”

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹசரணோத்ப்ருதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[எட்டாம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L., அட்வோகேட், திருச்சி]

அபிநிவேசன்:—[தன் திறமையில் மிக்க கௌரவத்துடன்]

“ ஹ்ருஷ்யந்தி வ்யஸநேஷு ஸத்வரம் அநாயாஸ்யேஷு மத்வீக்ஷிதா: ।
ப்ராரப்தம் ந பரித்யஜந்தி ச மஹ: ப்ரத்யூஹவாத்யாஹதா:
நாநார்த்தவ்யவஸாய நிர்பரதயா ந ஜஹத்யேவ வ்யவஸாயம் த்ருதிம்
ஸோஹம் ஸ்யாமபிநிவேச லக்ஷண மஹம் கோசாதிகாரே ஸ்தித: ॥ ”

அபிநிவேசம் என்பது ஒரு விஷயத்தில் விடாப்பிடியாகப் பற்றும் பிடிவாதம். இது நல்ல விஷயத்தில் இருந்துவிட்டால் சிறந்த நற்குணமே. ஆனால் நல்ல விஷயத்தில் இது முதலில் ஏற்படுவதில்லை. பள்ள மடையான ப்ராக்ருத விஷயங்களிலேயே ஸஹஜமாக இது இறங்கிவிடுகிறது. ‘வ்யஸநம்’ என்பது, காதல், கவருடல், (சூதாட்டம்), கள்ளுண்டல், வேட்டையாடுதல், க்ரூரமாகப் பேசுதல், க்ரூரமாகத் தண்டித்தல், வம்புப் பேச்சுப் பேசுதல் என்னும் ஏழு கெட்ட விஷயங்களைக் குறிக்கும். ‘வ்யஸநம்’ என்று துக்கத்திற்கும் பெயர். இன்ப ரஸம் இருப்பதுபோல இவை முதலில் தோன்றினாலும், இவையெல்லாம் துக்கத்தையும் கேட்டையும் தனக்கும் பிறர்க்கும் தருவன. இந்தத் துரப்யாஸ வ்யஸநங்கள் முடிவில் துக்க வ்யஸநமே யாகும். இந்த ஏழு துரப்யாஸங்களி லும் இறங்கினவர் மீள்வது அரிது. ‘ந ச புநராவர்த்ததே’ என்று இது விஷயத்திலும் சொல்லலாம். இவ்வேழு குணங்களுக்கும் ‘வ்யஸநம்’ என்னும் பெயர் உசிதமே. சிலர் வ்யஸநம் என்னும் பெயரையுடைய இந்த ஏழு துர்வழக்கங்களிலும் ஈடுபட்டு இன்பப்படுவதுபோல் நினைக்கிறார்கள்.

ஹ்ருஷ்யந்தி வ்யஸநேஷு—துக்கங்களிலேயே இன்ப ரஸம் உறுகிறார்களே! இதென்ன விபரீதம்!

அநாயாஸ்யேஷு—இந்தத் துர்வழக்கங்களில் வீணே இறங்குகிறார்கள்; தர்ம புத்ரர் சொக்கட்டான் ஆட்டத்தில் இறங்கியதுபோல. இதில் ஒரு நற்பயனுமில்லை. கேடுகள் அபரிமிதம்.

மத்வீக்ஷிதா:—விடாப் பிடிவாதமாகிய என்னால் கடாக்ஷிக்கப்பட்டு இப்படி இறங்குகிறார்கள். தற்புகழ்ச்சியால் இவன் ‘என் கடாக்ஷத்தால்’ என்று பேசுகிறான். இவை பிறவித் துர்க்குணங்களாயும் துஷ்டர் ஸஹவாஸத்

18925 4

தால் பழகுவதாயு மிருக்கும். விஷ்ணு கடாக்ஷத்தால் ஸாத்விக ராவர்; இவன் கடாக்ஷத்தால் தாமஸ ராவர்.

உச்யமாநா: ப்ரத்யூஹ வாத்யாஹதா: ப்ராரப்தம் ந பரித்யஜந்தி—எத்தனை பேர்கள் எத்தனை தடுத்தாலும், எத்தனை பெரிய விக்நங்கள் வந்து தாக்கினாலும், ஆரம்பித்த இந்தத் துரப்யாஸங்களை விடுகிறதில்லை.

‘ விக்நை: புந: புந: ப்ரதிஹந்யமாநா:
ப்ராரப்தமுத்தமகுணா: ந பரித்யஜந்தி ’

என்ற பழமொழி ச்லோகத்தை நினைப்பூட்டுவதில் மிக்க ரஸ முண்டு. ‘உத்தம குணரான பெரியோர் திரும்பவும் திரும்பவும் விக்நங்களால் தடைகள் வந்தாலும் ஆரம்பித்த நற்செய்கைகளை விடவேமாட்டார்கள்; கடைசி வரையிலும் த்ருடப்ரயத்நம் செய்து அவற்றை முடித்தே தீர்வர்’ என்பது அப்பழமொழியின் பொருள். இந்த அதம குணரான தாமஸர்கள் தாங்கள் தொடங்கிய வ்யஸநங்களில் எத்தனை விக்நங்கள் வந்தாலும் அவற்றை விடவே மாட்டார்கள். ‘அப்யாஸம் (வழக்கம்) என்னும் பேய் நல்வழக்கங்களிலும் விட முடியாத உறுதிப் பற்றைத் தருவதால், நல்ல விஷயங்களில் அதை (அப்யாஸத்தை) ஶுபமான தேவதை யென்றே சொல்லவேண்டும்’ * என்று ஷேக்ஸ்பியர் கவி கூறினார். அம்மாதிரியான அபிப்ராயத்தை ஸ்வாமி இங்கே மஹான்கள் பிடிவாத உறுதி விஷயமான ச்லோக வார்த்தைகளைத் துர்வழக்க விஷயத்தில் படிப்பதால் வ்யஞ்ஜநம் செய்வது ரஸிக்கத்தக்கது. நல்ல விஷயத்தில் விடமுடியாத வழக்கம் ஏற்படுவது நன்மையே. ஶமதமாதி நற்குணங்கள் பிசாசுபோல் நம்மைப் பிடித்துக்கொண்டால் நமக்கு நலமே. ‘வேதாத்யயநத்தை ஓயாமல் செய்பவர் பிச்சேறினும் ஓத்தையே சொல்வர்’ என்று ஈடு காட்டிற்று. ‘ப்ரத்யூஹம்’ என்பது விக்நம். ‘வாத்யா’ என்பது, மநுஷ்யரையும் பின்னே பலமாகத் தள்ளிவிடும் புயற் காற்று. விக்நங்களால் சலந மடையார். அர்த்தம் (செல்வம்) என்பது மிக்க பயங்களுக்கும் அநர்த்தங்களுக்கும் மூலம். நம்மிடத்தில் பணம் குவிந்திருந்தால் அது நமக்குப் பய மென்னும் துன்ப ரஸத்தைக் கொடுக்கும். அது உண்மையில் ‘பயாநகம்’ என்னும் பய

---

* That monster, custom, who all sense doth eat,
Of habits devil, is angel yet in this,
That to the use of actions fair and good
He likewise gives a frock or livery,
That aptly is put on. [Hamlet, Act III Scene IV].

["That moster, custom, who destroys all natural sensibility; custom that devil among human habits of conduct, is yet an angel in this regard, that when once the habit of fair and good actions is acquired, custom lends a cloak that is worn quite easily." In other words, bad habits, with this numbing or stupefying effects on the conscience are most easily formed, but good habits are fostered no less readily.]

ரஸத்தைத் தருவது. இதில் ச்ருங்கார ரஸத்தில்போல ரதியை (இன்பத்தை) ஓயாமல் பாவிக்கிறார்கள். பய ரஸத்தில் ச்ருங்கார ரஸத்தைப் பாராட்டுவது. 'அர்த்தம் அநர்த்தம்' என்று பஜகோவிந்த ச்லோகம் கூறும். அநர்த்தத்திற்கே அர்த்தம் என்று விபரீதத் திருநாமம். 'உத்வேஜநம் ஹி ப்ரியநஷ்ட' என்பது ப்ரபோத சந்த்ரோதய வசநம். பெருத்த தநக் குவியலும் மரணபாயத்தை விளைவிக்கக்கூடும்.

அபிநிவேச: அஹம்—பிடிவாத மென்னும் குணமாகிய நான்; நான் நான் என்னும் அஹந்தை இவனுக்கு எப்படி இல்லாமலிருக்கும்?

ஹடக்ரஹ: அஹம்—என் ருசி ஒன்றையே பார்ப்பேன்; பிறர் சொல்வதைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேன்; காது கொடுக்கவும் மாட்டேன்.

'மோஹஸ்ய கோசாதிகாரே ஸ்தித:—மஹா மோஹ மஹாராஜருடைய கஜானா (நிதி) அதிகாரத்தில் இருக்கிறேன். இந்த அபிநிவேச குணத்தால் மோஹம் மேல்மேலும் வளரும். பிடித்த மோஹம் விடவே விடாது. 'தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று மீளாத மோஹமே இருக்கும். கண்ணைக் கொட்டாமல் மற்றொன்றையும் கண்ணெடுத்துப் பாராமல் பணப் பொக்கிஷத்தைப் பார்த்துக்கொண்டே இன்புறுகிறேன். பணத்தைக் குவிப்பதில் நான் பரமைகாந்தி. மேலும் லோபனென்னும் படனும் மஹாமோஹருக்கு ஸர்வஸ்வமான என்னை ப்ராண மித்ரமாக வைத்துக்கொண்டு எங்கும் ஜயசீலனாக விளங்குகிறான். 'லோப: ஸர்வகுணாந் ஹந்தி' * என்பர். மற்ற என்ன குணங்கள் இருந்தாலும் அந்தக் குணங்கள் ஒன்றும் சோபிக்காமல் லோபம் செய்துவிடும். எப்படியென்று கேட்பீரோ?

"அவஸாத ப்ரஸங்கேஷு ஸ்வயம் ஸந்தோஷணாத்ருத: ।
ஸஹாய: ப்ரோத்ஸாஹநே ப்ராதா அநுஜஸம்பவ: ॥

[சோர்வு தலையெடுக்கும்போது ஆச்வாஸநம் செய்து தைர்ய மூட்டும் அருமைத் தம்பி நான். ராமனுக்கு லக்ஷ்மணன்போல் நான் அவனுக்கு வலது கை போன்றவன்.]

---

* உளப்பரும் பிணிப்புறு உலோப மொன்றுமே
அளப்பரும் குணங்களை யழிக்கு மாறுபோல்
கிளப்பரும் கொடுமைய வரக்கி கேடிலா
வளப்பரு மருதவைப் பழித்து மாற்றினள்."

[மிகப் பல நற்குணங்கள் நிறைந்த மனத்தை உலோப குண மொன்றே பாழாக்குவது போல, தாடகை என்னும் அரக்கி ஒருத்தி எல்லா வளமும் நிறைந்த மருத நிலத்தை நாசம் செய்து பாலை நிலமாக ஆக்கி விட்டாள்.]

—கம். ராமா. பால. காண். தாடகை வதைப் படலம்—42

கோ. ஸு.

இதோ நம் குலத்தோருக்குள்ளே பெரும் யுத்தம் நடக்கப்போகிறது. ‘ஸாம்பராயிகம்’ என்று இவன் வாயில் ஆச்சர்யமாக ஶப்தம் வருகிறது. அதற்கு ‘யுத்தம்’ என்றும், ‘மாண்டவருக்குச்செய்யும் உத்தர க்ரியை’ என்றும் இரண்டு பொருள்கள். முதலில் விவேகர் திறத்தார் எங்களெல்லோருக்கும் தகப்பனான ஜீவனுக்கு ஆத்ம வித்யையைச் சொல்லிவைத்தார்கள். பிறகு அதற்கு விரோதிகளான ஸாங்க்யம், யோகம், வைசேஷிகம், ஜைநம், பௌத்தம், பாசுபதம் முதலிய ஸமயங்களின் துர்ப்பலத்தை அவருக்கு மூதலித்து பரப்ரஹ்மத்தை ப்ரகாசப்படுத்தும் வேதாந்த ஶாஸ்த்ரத்தில் ச்ரத்தை குறையாமலிருக்கும்படி செய்தார்கள். பிறகு ப்ரயோஜநத்தையே விரும்பாமல் கேவலம் பகவத் கைங்கர்ய மென்னும் புத்தியோடு கர்மங்களை அநுஷ்டித்தல் சாந்தி முதலிய குணங்கள் ஆகிய அங்கங்களோடு கூடிய ப்ரஹ்ம வித்யைகளில் இன்பத்தோடு இறங்கும்படி செய்யப்பட்டார். காமன் க்ரோதன் முதலிய தோஷங்கள் நெருங்குவதை அரிதாக்கிவிட்டார்கள். ஶமம் தமம் வைராக்யம் முதலிய அங்கங்களோடு கூடிய யோகம் தொடங்கப்போகிறது. [முதல் அங்கம் முதல், ஏழாவது அங்கம் முடிய, மோக்ஷத்திற்காக விவேகருடைய ப்ரயத்நங்களெல்லாம் இங்கே வர்ணிக்கப்படுகின்றன.]

[நீளமாகப் பெருமூச்சு விட்டுத் துக்கத்துடன்]

“ விஜிதொ ஹ்ரைெயளிஃ ஸ்த்ரீஹி விஃஜிதா ஹிஜ-உமத்யம் ।
தவைவ ஸூஹடாஃ வந்த்ரா தாஃ ஸ்த்ரீஹிரெவஜிகீஷிதாஃ ॥ ”

மந்மதன் முதலிய புகழ்பெற்ற போர்வீரர்கள் ஸ்த்ரீகளைக்கொண்டு மூவுலகங்களையும் ஜயித்தார்கள். அந்த பலிஷ்டரான வீரர்களைச் சில ஸ்த்ரீகளைக் கொண்டு ஜயிக்க எதிரிகள் விருப்பங் கொண்டிருக்கிறார்கள். [மூன்றாம் அங்கத்தின் தொடக்கத்தில் மந்மதன் இப்படி ஆர்வத்தோடு பேசிய வீரவாதம் இதனால் ஸூசிக்கப்படுகிறது.]

[திரைக்குள்ளிருந்து]

“என் மைத்துனனாகிய நீர் சொல்வது பச்சைப் பசும் பொய்யே. மஹாமோஹர் ஸேனையில் தலைமை வஹிக்கும் வீரர்களைப் பெண்களைக்கொண்டு எதிரிகள் ஜயிக்க நினைப்பது நிறைவேறுமா?”

அபிநிவேசன்:—உள்ளேயிருந்து பேசுகிறவள் என் இனியாள் துர்வாஸனை. அமங்களம் நீங்கவேணும்; அமங்களம் நீங்கவேணும். நான் ‘முண்டை’ யென்று திட்டியதை இவள் மன்னித்து என்னை நெருங்கவேணும்.

துர்வாஸனை.—[வெளியே நாடக மேடைக்கு வந்து] ஆர்யபுத்ரரே! இதோ இருக்கிறேன் துர்மதிதேவி. ஸேவையின் ரஸத்தால் பரவஶமான மனதுடைய நான் உலக வ்ருத்தாந்தம் தெரியாதவளாகக் கேட்கிறேன். எந்த ஆண் வீரர்கள் எந்தப் பெண் பிள்ளைகளைக் கொண்டு ஜயிக்க ப்ரயத்நப்படுகிறார்கள்?

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மது வித்யை

[மறுப்புரை]

[ஸ்ரீ. உப. மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத கலாசாலை,
திருவையாறு]

சாந்தோக்யத்தில் மதுவித்யா ப்ரகரணத்திலே 'அத தத ஊர்த்வ உதேத்ய' என்று ஆரம்பித்து, காரணாவஸ்த ப்ரஹ்மோபாஸநமும், அதற்குமுன் கார்யாவஸ்த ப்ரஹ்மோபாஸநமும் சொல்லியிருக்கின்றன வென்று ஸ்ரீபாஷ்யத்தி லுள்ளது. உபநிஷத் பாஷ்யத்தில் இதைப்பற்றின ப்ரஸ்தாவம் பின்வருமாறு:—

(1) மூல ச்ருதியிலுள்ள 'அத' சப்தம் முதலியவற்றின் ஸ்வாரஸ்யத்தை அநுஸரித்து ஸ்ரீபாஷ்யத்தில் 'காரணாவஸ்தம்' என்பதற்கு 'அகார்யாவஸ்தம் முக்த்யவஸ்தம்' என்கிற அர்த்தமே உசிதம்; ஆதித்ய பாவ ப்ராப்தி பூர்வாவஸ்தை யன்று; (2) ஸ்ரீபாஷ்ய ஸ்வாரஸ்யத்தை அநுஸரித்து ஆதித்ய பூர்வாவஸ்தையே 'அத தத' இத்யாதி ச்ருதிக்கு ப்ரதிபாத்ய மென்று வ்யாஸார்யர் அருளினர். அவர் ஆசயம் என்னவென்றால்:—'அத' சப்தமானது ஆநந்தார்த்தக மன்று; மற்றொரு விஷயத்தை ப்ரஸ்தாவிப்பது இதன் அர்த்தம்; அதற்கு மேல் வாக்யத்திற்கும் உதயாஸ்தமய தத்கார்யங்க ளில்லை யென்று அர்த்தம் என்று தாத்பர்யம் என்று. 'இந்த உபநிஷத் பாஷ்யமும் ஸ்ரீபாஷ்ய ச்ருதப்ரகாசிகையும் ஸாமரஸ்ய மன்றியில் முரண்பட்ட அபிப்ராய முள்ளவைகள்' என்பதாகச் சென்ற ஸஞ்சிகையில் நமது ஸௌஹ்ருத் ஸ்ரீ. உப. பத்மநாபாசார்ய ஸ்வாமி எழுதியிருக்கிறார்.

(1) ச்ருதப்ரகாசிகா பக்ஷத்தை உபநிஷத் பாஷ்யகாரரே அநுவாதம் செய்து இப்பக்ஷத்தில் 'காரணாவஸ்தம்' என்கிற ஸ்ரீபாஷ்ய ஸ்வாரஸ்ய முண்டு என்பதாகவும், ச்ருதிக்கு நிர்வாஹம் இன்ன ரீதியில் என்பதாகவும் அருளியிருப்பதை ப்ரசுரம் செய்ய இந்த ஸ்வாமிக்கு மனம் வரவில்லை. த்விதிய பக்ஷத்தில் ஸ்ரீபாஷ்யாதி ஸ்வாரஸ்யத்தை உபநிஷத் பாஷ்யகாரரும் அருளுவதால் முரண்பாட்டுக்கு யாதொரு அவகாசமு மில்லையே.

(2) 'காரணாவஸ்தை' என்கிற ஸ்ரீபாஷ்யத்திற்கு 'கௌணமாக அர்த்தம் கொள்ளவேணுமே தவிர, ஸ்ருஷ்டிக்கு முன்னால் என்று ச்ருதப்ரகாசிகையில் அர்த்தம் பண்ணினது உசித மில்லை' என்று உபநிஷத் பாஷ்யத்தில் வாசக மில்லை. அப்படி யிருப்பதாக இந்த ஸ்வாமி எழுதியிருப்பது இவருடைய கல்பநமே யன்றி உபநிஷத் பாஷ்யாசய மன்று.

(3) 'ஹ்ராஸவ்ருத்ய' ஸூத்ர ச்ருதப்ரகாசிகா நிஷ்கர்ஷத்தையே இங்கு உபநிஷத் பாஷ்யகாரர் முதல் பக்ஷத்தில் அருளியிருக்கிறார்.

“ 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 [illegible] 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌾
𑌵𑌿𑌰𑌹𑌿𑌤 𑌜𑍀𑌵𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌕𑌾𑌰𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌤𑍍𑌵𑌮𑍍 ।
𑌵𑌿𑌕𑍃𑌤𑌿 𑌵𑌿𑌰𑌹𑌿𑌤 𑌜𑍀𑌵𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌯𑌾𑌵𑌤𑍍; 𑌤𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌅𑌸𑌨𑍍𑌨𑌾𑌮 ” என்றும்,

“ 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 [illegible] 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌕𑌾𑌸𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾
𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌾 । 𑌸𑌙𑍍𑌕𑍁𑌚𑌿𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑍀𑌵 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾 𑌕𑌾𑌰𑌣𑌾𑌵𑌸𑍍𑌥𑌾 ”

என்றும் இவ்வாருகப் பல விடங்களில் கார்யாவஸ்தைக்கு மாறுதலான அவஸ்தையே காரணவஸ்தை என்பதாகவும், அந்தக் காரணவஸ்தையானது ப்ரளய தசையிலும் முக்தி தசையிலும் துல்யமே என்றும் ஐயமறத் தெளிவாக ச்ருதப்ரகாசிகையிலேயே நிஷ்கர்ஷித்தருளியிருக்கிறுர். ப்ரக்ருத மத்வதிகரணத்திலும், ‘ஆதித்யாதி நாமரூப விசிஷ்ட ஜீவசரீரகம் ப்ரஹ்ம கார்யாவஸ்தம்; ஆதித்யாதி நாமரூப ரஹித ஜீவமாத்ரஸ்யாந்தர்யாமி ப்ரஹ்ம காரணவஸ்தம்’ என்பது ச்ருதப்ரகாசிகை. கார்யாவஸ்தைக்கு மாறுதலான அவஸ்தையே காரணவஸ்தை என்பது இங்கும் தெளிவாகவே யுள்ளது.

4. ‘காரணவஸ்தம்’ என்பதற்கு ‘ஸ்வாப்யய’ ஸூத்ர ச்ருதப்ரகாசிகையிலும் ப்ரக்ருதோபநிஷத் பாஷ்யத்திலும் அருளியிருப்பது முக்யார்த்தமேயன்றிக் கௌணர்த்த மன்று.

“ 𑌸𑍍𑌵𑌵𑌿𑌕𑍃𑌤𑍍𑌯𑌰𑍍𑌥 [illegible] 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌾 [illegible]
[illegible]; [illegible] 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌤𑍍 ”

என்று ந்யாயபரிசுத்தியில் ஸ்ரீ தேசிகன் நிஷ்கர்ஷம் செய்தருளியிருப்பது இங்கு அநுஸந்தேயம். ஆகவே: கௌணர்த்தம் என்று இந்த ஸ்வாமி நினைப்பதும் சரியன்று. கௌணர்த்தம் என்று உபநிஷத் பாஷ்யத்தில் அருளவு மில்லையே.

5. ஸ்ரீ பாஷ்ய ச்ருத ப்ரகாசிகா ஸூக்திகளுக்கு, வரப்போகும் ப்ரளயாவஸ்தையி லுள்ள ஸூர்ய தசாந்தராத்மோபாஸந பரமாக அர்த்தம் பண்ணல் உபநிஷத்திலுள்ள ‘𑌅𑌥’ சப்தத்தின் அர்த்த ஸ்வாரஸ்யத்திற்கு விரோத மில்லை யென்று இந்த ஸ்வாமி எழுதுகிறுர். வரப்போகும் ப்ரளயாவஸ்தை ஸ்ரீ பாஷ்ய ச்ருதப்ரகாசிகைகளின் கருத்தன்று. இதை மேலே நிரூபணம் செய்யப்போகிறேன். ஆகவே மூல ச்ருதியிலுள்ள ‘𑌅𑌥’ சப்தத்தின் அர்த்த ஸ்வாரஸ்யத்திற்கு விரோதத்தை ஸ்ரீ பாஷ்யாதிகளுக்கு இந்த ஸ்வாமியே ஸ்தாபநம் செய்கிறுராயிற்று.

6. மத்வ பாஷ்யத்திலும் சங்கர பாஷ்யத்திலும் ‘𑌅𑌥 𑌤𑌤 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌃’ இத்யாதி ச்ருதியானது முக்த்யவஸ்தையைப் பற்றியதாகவே ஸ்பஷ்டமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ‘𑌅𑌥’ சப்தமானது ‘ஆநந்தர்யம்’ என்கிற அர்த்தத்திலேயே ஸ்வரஸ மென்று ஜிஜ்ஞாஸாதிகரணத்திலேயே ஸ்ரீ பாஷ்யாதிகளில் ஸித்தாந்திதமானது. ‘காரணவஸ்தம்’ என்கிற ஸ்ரீ பாஷ்யம் ‘ஸ்வாப்யய’ ஸூத்ர ச்ருத

ப்ரகாசிகையின்படி முக்த்யவஸ்தாபரமென்று கொண்டால் மூல ச்ருதிக்கும் ஸ்வாரஸ்யம் ஸித்திக்கின்றது. இதுவே முதல் பக்ஷத்தின் திரண்ட பொருள்.

7. ‘ந வை தத்ர ந நிம்லோச நோதியாய கதாசந’ என்று ‘அத தத ஊர்த்வ:’ என்கிற நிலையைப்பற்றிய மேல் ச்லோகம். ‘எப்பொழுதும் உதயாஸ்தமய மன்றியிலிருக்கிறான்’ என்பது இதன் பொருள். இது முக்த்யவஸ்தைக்கு மிகவும் பொருத்தமானது. இந்த ஆதித்ய ஸ்ருஷ்டிக்குப் பூர்வ நிலையை ‘அத’ சப்தமும் மேலுள்ள ச்லோகமும் ஸ்வரஸமாகக் காட்டமாட்டா என்பதை இந்த ஸ்வாமியும் இசைகிறார். வரப்போகும் ஸ்ருஷ்டிக்குப் பூர்வநிலை என்று சொல்லிவிட்டால் ‘அத’ சப்த ஸ்வாரஸ்யத்திற்கு விரோதமில்லை யென்றே இவர் வாதம். இந்தக் கார்யாவஸ்தையைப் பற்றிய காரணாவஸ்தையே ஸ்ரீ பாஷ்யத்திற்கும் அர்த்த மென்பது வ்யாஸார்ய பக்ஷம். இப்பக்ஷத்தில் மூல ச்ருதியிலுள்ள ‘அத’ சப்தமானது அர்த்தாந்தர ப்ரஸ்தார்த்தமேயன்றி ஆநந்தர்யார்த்தக மன்று. ஆகவே ‘அத’ சப்தம் முதலியவற்றின் ஸ்வாரஸ்யத்தின்படி இந்த ஸ்ருஷ்டிக்கு முன் நிலை உசித மன்றுதானே. ‘காரணாவஸ்தம்’ என்கிற ஸ்ரீ பாஷ்ய ஸ்வாரஸ்யத்தின்படி வ்யாஸார்ய பக்ஷமே உசிதமானது. முக்த்யவஸ்தம் என்கிற முதல் பக்ஷத்தில் (1) ‘அத’ சப்த ஸ்வாரஸ்யம், (2) மேலுள்ள ச்லோக ஸ்வாரஸ்யம் ஸ்வாப்யய ஸூத்ர ச்ருதப்ரகாசிகா நிர்ணயம், (3) த்வைதாத்வைத பாஷ்ய ஸம்மதி ஆகிய இவை ஸாதகங்கள். இரண்டாவது பக்ஷத்தில் ‘காரணாவஸ்தம்’ என்கிற ஸ்ரீ பாஷ்ய ஸ்வாரஸ்ய மாத்ரமே யுள்ளது. பக்ஷ த்வயத்திலும் ‘காரணாவஸ்தம்’ என்கிற பதம் முக்யார்த்தகமே. ‘அத’ சப்தமும் அப்படியே பக்ஷ த்வயத்திலும் முக்யார்த்தம் தான். ச்ருதிக்கு ஸ்வாரஸ்யம் முதல் பக்ஷத்தில். ஸ்ரீ பாஷ்ய ஸ்வாரஸ்யம் இரண்டாம் பக்ஷத்தில். இதுவே உபநிஷத் பாஷ்ய விவக்ஷிதம். இந்த பக்ஷ த்வயத்தையும் சாரீரகாதிகரண ரத்நமாலா ப்ரகாசத்திலே ஸ்ரீ கபிஸ்தலம் ஸ்வாமியும் துல்ய விகல்பமாக்கியிருப்பதுவும் அநுஸந்தேயம்.

8. ச்ருதப்ரகாசிகா பக்ஷம் அநுபபந்ந மென்று உபநிஷத் பாஷ்யகார் திருவுள்ளம் பற்றியிருந்தால் இந்தப் பக்ஷத்தில் ஸ்ரீ பாஷ்ய ஸ்வாரஸ்யமும், ‘அத’ இத்யாதி ச்ருதி நிர்வாஹமும் காட்டியருளமாட்டா ரன்றோ? நமது ஸுஹ்ருத் தமது வ்யாஸத்தில், (1) ப்ரதம பக்ஷத்தை மாத்ரம் அநுவாதம் செய்தும், (2) இரண்டாவது வ்யாஸார்ய பக்ஷ தத்ஸ்வாரஸ்ய நிர்வாஹம் காட்டியிருப்பதை மறைத்தும், (3) கௌணமாக அர்த்தம் என்றும், (4) வ்யாஸார்யர் சொல்லியது உசிதமில்லை என்றும், உபநிஷத் பாஷ்யத்தி லிருப்பதாகக் கல்பநம் செய்தும், (5) உபநிஷத் பாஷ்யகாரர் அர்த்தம் பண்ணியிருப்பதற்கு ‘ஸூதஞ்சே தூஷ்யூ உநெ: நியொமவ்யநயொ மாநஹேவாக’ என்கிற ந்யாயத்தைத் தவிர என்றும் எழுதியிருப்பதையும் ஸஹ்ருதயர் கவனிக்கவேண்டும்.

9. இனி நமது ஸுஹ்ருத்தின் வ்யாஸத்தில், ‘மேலும்’ இத்யாதி பாராவிலுள்ள விஷயங்களின் போக்கை விமர்சிப்போம். கார்யாவஸ்தைக்குப் பிற்பட்ட காலத்தைக் குறிப்பதான ச்ருதியிலுள்ள ‘அத’ சப்தத்தின் அர்த்த ஸ்வா

ரஸ்யத்துக்கு விருத்தமாக ‘இப்பொழுதுள்ள கார்யாவஸ்தைக்கு முன்புள்ள காரணாவஸ்தை’ என்று ஸ்ரீ பாஷ்யத்திலோ ச்ருதப்ரகாசிகையிலோ சொல்லவில்லையாம். ஆதித்யனுக்கு இப்பொழுதுள்ள கார்யாவஸ்தைக்குப் பிறகு ப்ரளயத்தில் அசிதவிசிஷ்டமாய் ஸூக்ஷ்ம நிலை ஏற்பட்டு அதற்குப் பிறகு மறுபடி ஆதித்ய ஜன்மம் ஏற்படப்போகிறது. அந்த இரண்டாவது ஜன்மத்திற்குக் காரணாவஸ்தை என்று சொல்லிவிட்டால் ‘ஸம’ சப்த ஸ்வாரஸ்யமும் ஸம்ரக்ஷித மாகிவிடுகிறதாம்; இப்பொழுது இருக்கும் ஸூர்யன் மறுப யும் ப்ரளயத்தில் நாமரூபங்களை இழந்து அதன் பிறகு நாம ரூபங்களோடு ஆதித்யத் தன்மையை அடைந்து மோக்ஷம் போகலாமாம். இது ஒரு நிர்வாஹம். இதன்படி மது வித்யையில் மோக்ஷத்திற்கு ப்ரஸக்தியே யில்லை. நித்ய ஸம்ஸாரியா யிருக்கவேண்டியதே பலம் என்று தேறுகிறது. ப்ரஹ்ம திவஸந்தோறும் ஆதித்யனாகவே பிறந்து ப்ரஹ்ம ராத்ரிதோறும் ப்ரளய தசையில் ஸூக்ஷ்ம நிலை பெற்றாலன்றி, காரணாவஸ்தோபாஸநம் இவர் பக்ஷத்தில் சக்யமன்று. இப்பொழுதுள்ள ஆதித்யன், தமது ஜன்மாந்தர காரணாவஸ்தோபாஸநம் செய்வதற்காக மறு ஜன்மம் பெறவேண்டும். அந்த மறு ஜன்மத்தில் செய்யும் உபாஸநமும் அதற்கு மறு ஜன்மத்திற்குக் காரண நிலையைப்பற்றிய தாகையால், அதற்குப் பிறகும் ஜன்மம் பெறவேண்டும். இவ்வாறாக உபாஸநம் செய்யும் ஜன்மத்திற்குப் பிறகு நியமேந ஜன்மம் எடுத்தாலன்றி, காரணாவஸ்தோபாஸநம் செய்ய முடியா தன்றோ? ஆகவே ஆதித்யன் மதுவித்யையில் இறங்கினால் முக்தி பெற வழியில்லை. ‘ஊர்த்வ உதேத்ய’. மதுவித்யா நிஷ்டனான ஆதித்யனுக்கு நியமேந புநர்ஜன்மம் ஸித்தம், இல்லையேல் காரணாவஸ்தோபாஸநமு மில்லை. சரம சரீரத்தில் உபாஸநம் செய்து முக்தி பெற விரகில்லை. மத்வதிகரண ஸித்தாந்தமே பாதிதமாகும்.

10. நிற்க: இந்த ஆதித்யன் இந்த ப்ரஹ்ம திவஸத்தின் முடிவிலேயே மோக்ஷம் அடைவதாக நியமம் சொல்ல முடியாது. ப்ராரப்த வைசித்ர்யத்தாலே மறு ஜன்மமும் அடையக்கூடு மென்னு மிவர், இந்த ஆதித்யன் ப்ராப்த கர்ம நாசத்தினாலே இந்த ஜன்மத்தின் முடிவிலும் மோக்ஷம் பெறலா மன்றோ என்பதை மறந்தார். ஏதத் தேஹாவஸாநத்தில் மோக்ஷம் பெறுவ தென்பது மதுவித்யாநிஷ்டனான ஆதித்யனுக்கு நினைப்பதற்கு மிடமில்லையே. காரணாவஸ்தோபாஸந மென்பது மறு பிறவி யிருந்தா லன்றோ, ஆதித்யனாகவே பிறக்க வேண்டும்.

11. இனி மற்றொரு நிர்வாஹ மிவர் எழுதியிருப்பது என்னவென்றால்:- இந்த ப்ரஹ்ம திவஸாவஸாநத்திலேயே இந்த ஆதித்யன் மோக்ஷ மடைந்துவிடுவதாக வைத்துக்கொண்டாலும், இந்த ஸூர்யன் ஸூக்ஷ்ம தசையோடு வரப் போகும் ப்ரளயத்தி லிருப்பதாக ச்ருதியானது கல்பித்துச் சொல்வதாகவும் சொல்லலாமாம். கார்யாவஸ்தோபாஸநம் ப்ராமாணிகமானது. காரணாவஸ்தோபாஸநமோ கால்பநிகம் என்பதாக இந்த நிர்வாஹத்தின் ஸரணி. காரணாவஸ்தம் என்கிற ஸ்ரீ பாஷ்யத்திற்கு உபநிஷத் பாஷ்யகாரர் கௌணார்த்தம்

சொல்லி விட்டதாக முனிந்த இவர் காட்டும் ஸ்வரஸார்த்த மிது. காரணவஸ்தம் என்கிற ஸ்ரீபாஷ்யத்திற்குக் காரணவஸ்தனைக் கல்பிதனான ஆதித்யனுக்கு ஆத்மாவாய்க் கல்பிதமானது என்று பொருளன்றோ தேறியது? 'காரணவஸ்தனைக் கல்பிதனான' என்பது காரணவஸ்த சப்தத்திற்குப் ஸ்வரஸப் பொருளாகுமோ? காரணவஸ்தையைப்போல் கார்யாவஸ்தையும் கல்பிதமாகலா மன்றோ? இந்த ஆதித்யனுக்குக் கார்யாவஸ்தை இப்பொழுது ப்ராமாணிகமாய்க் காண்பதுபோல் ப்ராரப்த வைசித்ர்யத்தாலே மறு ப்ரளயத்தில் ஸூக்ஷ்ம ரூபமும் பிறகு புநர்ஜந்மமும் ப்ராமாணிகமாகக் கூடுமாகையால் அங்குக் கல்பநம் எதற்காக? ஸூர்யன் மேற்கில் உதித்துக் கிழக்கில் அஸ்தமிப்பது அஸம்பாவித மாகையால், அது கால்பநிகமாகவே இருக்கவேண்டும். புநர்ஜந்மமானது அஸம்பாவித மன்றாகையால், காரணவஸ்தையைக் கால்பநிகமாகவே கொள்ள ப்ரஸக்தி என்ன? இவ்வாறாக இவர் முதல் நிர்வாஹத்தில் ஆதித்யனுக்கு மதுவித்யோபாஸநத்தினால் நித்ய ஸம்ஸாரித்வமே பலிக்கும் என்றும், இரண்டாவது நிர்வாஹத்தினால் ஸ்ரீ பாஷ்ய ஸ்வாரஸ்ய பங்கமே பலித்த தென்றும் தேறியது.

12. இவருடைய இரண்டு நிர்வாஹங்களிலும் அர்த்தாநௌசித்யம் இவ்வாறாக ஒருபுற மிருக்க, சப்த ஸ்வபாவ வைபரீத்யமும் ஏற்படுகின்றது. 'கார்யாவஸ்தம் காரணாவஸ்தம்' என்பது பரஸ்பரமுள்ள கார்யகாரண நிலையையே போதிக்கும். இங்குக் குறிப்பிடும் கார்யத்திற்குக் காரண மென்றும், அத்தகைய காரணத்திற்குக் கார்ய மென்னும் அர்த்தமே ஶாஸ்த்ரஜ்ஞரும் லோகத்திலும் ஒப்புக்கொண்டது. இப்பொழுதுள்ள கார்ய நிலையையும், வரப் போகும் கார்யநிலைக்குக் காரண நிலையையும் அடையவே இப்பதங்களின் பொருளாக

"உ தாநாதிஸஸம்ஸ்ருதிகாய ப்ரொயகவதா நாம் ஸஜஹி வ்யாஹர த
தத்த்வதொவஸ்யாவ்யதத்தமெ தாநகாதி நாநிர ஜஸலக்ஷணா"

என்பதாக ப்ரதிஜ்ஞா லக்ஷணத்திலே பட்டாசார்யர் இந்த ந்யாயத்தைக் காட்டியிருக்கிறார். படமும் ம்ருத்திகையும் கார்யகாரணங்கள் என்று வழங்குவதில்லை. இவைகளுக்குப் பரஸ்பரம் கார்யகாரண நிலை இல்லாமையாலன்றோ? ஆகவே இந்தக் கார்யாவஸ்தையைப்பற்றிய காரணவஸ்தையே ஸ்ரீ பாஷ்யத்திற்கு விவக்ஷிதம். அப்படியே ச்ருதப்ரகாசிகையும். பொதுவாகக் கார்யாவஸ்தை காரணவஸ்தை என்றிவ்வளவே நிர்த்தேசம் போதுமானது. சப்த ஸாமர்த்யமானது பரஸ்பர ஸம்பந்தத்தையே காட்டும். வரப்போகும் கார்யத்திற்குக் காரண மென்றும், இதற்கு முன்புள்ள காரணத்திற்குக் கார்ய மென்றும் சொல்வதற்குக் கார்ய கார்ண சப்த ஸமபிவ்யாஹாரம் பாதகமேயன்றி ஸாதக மன்று. ஆகவே இவருடைய இந்த நிர்வாஹ த்வயமும் அபிஜ்ஞர் ஒருவரும் இசையக்கூடிய தன்று. உபநிஷத் பாஷ்யகாரர் அருளிய பக்ஷ த்வய நிர்வாஹமே ஸ்ரீபாஷ்யம் ச்ருதப்ரகாசிகை இவைகளுக்கும் மூல ச்ருதிக்கும் ஒத்திருக்கிறது என்பது தத்வம். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மதுராலாபம்

[ஸ்ரீ. உ.ப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M, A., வித்வான் L. T., திருவையாறு]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

மன்னன் தன் கண்ணீரை அழுக்கடைந்த துணியால் துடைத்துக் கொண்டான். நீண்ட காவி உடை தரித்து நெற்றியில் திருமாலின் இலச்சினை மிளிர்ந்து நின்ற ஒரு துறவி பக்கத்தில் தோன்றினர். 'தனியே இம்மதிட்புறத்தில் கண்ணீர் சொரிந்து வாடும் நீ யாரப்பா! உன் முகத்தே காணப்படும் கடுந்துயரை யாரே தீர்க்கவல்லார்? உன்னைக் கமலாக்ஷன் கடைக்கணிப்பான்' என்றார். அன்பு ததும்பும் அக்குரலைக் கேட்ட மன்னன் தன்னையும் ஆதரித்து வினவ ஒரு புருஷன் உளனே என வியப்படைந்தான். அவன் மனம் வெடிப்பதுபோல் இருந்தது. இரு கரங்களையும் குவித்து 'ஸ்வாமி! நான் ஓர் ஏழை; நான் ஒரு நுண்ணிய புழு; பேதையிலும் பேதை' என்றான். பிறகு சற்று அண்ணாந்து நோக்கினன். அவன் கண்கள் சுழன்றன. சிவந்து சற்று வீங்கிய அக்கண்களில் பீளை தோன்றிக் கண்ணீர் அருவியாகப் பெருகியது. 'ஐயனே! விலகும்; அப்பாற் செல்லும்; பண்டு கடவுளைப் பகைத்த ராவண கம்ஸாதிகளையும் விட வன்மைகொண்ட ஒரு சண்டாளன் நான். தெய்வத்தை இல்லையென்று சொல்லி மட்டிலா மதங்கொண்ட மாபாவி. என் பாவங்களை ஏன் கேட்கின்றீர்?' என்று தன் தலையில் அறைந்துகொண்டான். துறவி அவன் அருகில் உட்கார்ந்து அவன் உடலைத் தடவி, 'ஸஹோதரனே!

"த்யௌ: ஸசந்த்ரார்க்க நக்ஷத்ரா கம் திஸோ பூர்மஹோததி: ।
வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந: ॥"

அதோ பார். கதிரவன் உதிப்பதும், கருங்கடல் நிற்பதும், கார்முகில் பெய்வதும், கடுங்கால் உழல்வதும், மதியது எழுவதும், மஹிதலம் நிற்பதும், செந்தீ எரிவதும், எல்லாம் வல்ல கடவுளான ச்ரிய:பதியின் ஆற்றலே. இம்முறையை அமைத்த சிறந்த வல்லவன் அவனே. அவனுடைய மாசிலாக் கருணையே நமக்குத் தாரகம். ஐயோ! நீ இப்படி அந்த நிர்மலனைக் குறித்துக் கண்ணீர் வடிக்கின்றனையே! செய்த மாபெரும் பாதகங்களுக் கெல்லாம் ப்ராயச்சித்தம், உள்ளம் வெதும்பி வடிக்கும் சூடான கண்ணீர்த் தாரையல்லவா? அப்பா! அப்பா! நீ யார் சொல்' என்றார். பரமானந்த மடைந்த மன்னன், 'துறவியாரே! நான் ஒரு பரதேசி. இந்த நாட்டைக் காணவந்தவன்' என்றான். தன்னை மன்னவனாகச் சொல்லிக்கொண்டு அவன் பட்டபாடு அவன் மனத்தை வருத்தியது. தான் மானுட வர்க்கத்தில் ஒரு பதர் என்று கண்டுகொண்டான். துறவியார், 'நண்பா! உலகெல்லாம் உடையவன் இறைவனே. அவன் ஆற்றலிலிருந்து சிதறிய ஒரு பொறியின் கணமே தேவர்

கள். அவர்தம் ஒரு கூறே மனிதரை ஆளும் மன்னவர். அத்தயாநிதியின் முன்னர் தேவரும் மனிதரும் யாவரும் ஒன்றே. அற்பமான பணமுடையாரும் மாபெரும் மன்னவரும் அவனது கடைக்கண் அருளால் பதம் பெற்றவர். அவன் சிறிது முனியின், இப்பதினான்கு உலகமும் பழங்கதையாகும். வான் இடியும். மண் கரையும். நீர் இறுகும். எரி மழுங்கி அழியும். இவ்வுலகம் நிற்பது அவன் தயையால். நாம் இருப்பது அவன் தயையால். நாம் உழல்வது அவன் தயையால். அவனது தயாவெள்ளம் பெருக்காறாக வரும் பொழுது நாம் ஏன் நலியவேண்டும்? அவன் தாயினும் தாய். தந்தையினும் தந்தை. உற்ற துணை. உறுதியாம் நண்பன். கற்ற மருத்துவன். கலங்காத வழிகாட்டி. ஐயோ! அவனை நினைப்பவர்க்கு என்ன குறை?' என்றார். கரங் குவித்த மன்னவன், 'பெரியீர்! இராப் பகலாக என் மனத்தே அவன் குடி கொள்ளுமாறு நீவிர் அருளவேண்டும்' என்று அழுதவண்ணம் சொன்னான். துறவி, 'மன்னவா! நாளைக் காலையில் உன்னை அரண்மனைக்கு அழைத்துச் செல்கிறேன். எங்கள் பாண்டிய மன்னனது திருவையும் ஆற்றலையும் நீதி பரிபாலநத்தையும் பார்' என்றார். துறவி அங்கே படுத்தார். பஞ்சணைமீது படுத்த மன்னவனும் வறிய பாறைகள் நிறைந்த அத்தரையில் படுத்தான். துறவி 'நண்பனே! நீ பாறையில் படுத்தறியாய் போலும்! ஐயோ! எந்த நாட்டுத் திருவாளனோ! வைராக்யம் ததும்பி உலகை வெறுத்து வெளிப்போந்தனையோ?' என்று பெருமூச்சு விட்டார். மன்னவன் மிகவும் களைப்புற்றுத் தீநமான குரலில் 'ஸ்வாமி! என்றும் அழியும் இவ்வுடல் எங்கே கிடந்தாலென்ன? நான் திருவாளனுமல்ல, தெய்வப் பிறப்புமல்ல. வேண்டியபடி விலாப் புடைக்கத் தின்று அலையும் ஒரு வீணனே' என்றான். மன்னன் படுத்தான். அவன் கண்களில் நீர் பெருகிப் பாறைமேல் தாரையாக ஓடியது. 'உண்ண ஒரு பிடி சோறற்று, நிற்க இடமற்று, உடல் வெதும்பி வாட, ஏ வீரவன்மா! உன் நிலைமையே நிலைமை! இந்த நாட்டிலே-என் மதுரையிலே-மன்னவனும் ஒருவன் உண்டாமே! பார்ப்போம். பரம்பொருளே! உன் மாயை விசித்ர மல்லவா?' என்று எண்ணினான். நள்ளிரவில் பலர் தட தடவென்று தீவட்டி வெளிச்சத்துடன் கொஞ்ச தூரத்தில் போய்க்கொண்டிருந்தனர். மன்னன் எழுந்தான். துறவி ஆரம்பித்தார். 'இந்நகரில் ப்ரபல தநவந்தன் ஸோமசேகரன் என்பான் இன்று இறந்தான். இளங் காளை. நிகரில்லாத செல்வம். வடிவழகில் மாரன். அவனை அதோ மைதானத்திற்கப்பால் வெகு தொலைவில் இடுகாட்டில் கொளுத்தி விட்டு வந்துள்ளார் இவர். வடிவழகு இளமை ஆற்றல் திரு எல்லாம் இறைவன் ஆணையான ஆயுள் முடிவு வந்தவுடன் என்செய்யும்? நண்பா! பலரைக் கதறவைத்து இவ்விளமகன் இறந்தான். இதுவே உலகம். 'ஶ்ர தஜ் — ஜஊநவதாம் வீரஜெஹெநஸஹஜாயதெ'. மனிதனின் மதி, சூழ்ச்சி, முயற்சிகள், உடல்வலி, அழகு, இவை என் செய்யும்? தெய்வ சக்தியின்முன் மனிதன் ஒரு புழு வல்லவா? தேவனோ பூபாலனோ இவரெல்லாம் தெய்வத்தின் பணியாளராக வேலைசெய்தா லன்றோ நலம்? அப்படிக்கின்றி, தெய்வத்தின் பெருமையைத் தம்பால் ஏற்றிக்கொண்டால் அழிவார்கள்! அழிவார்கள்!' என்றார். மன்னன் மூர்ச்சையானான்.

பசியாலுங் களைப்பாலும் மன்னன் அந்தப் பாறை மீதும் சிறிது நேரம் மெய்ம்மறந்து உறங்கினான். சிறிது நேரம் கொலு மண்டபத்தி லிருப்பது போலும், சேர சோழ மன்னர் தனியாகத் தன்னிடம் உரையாடுவதுபோலும், அரசியாருடன் உயர்ந்த அரமியத்தின் மீதிருந்து மதுரை மாநகரம் நிலவில் மிளிரும் காட்சிகளைக் காண்பதுபோலும் கனவு கண்டான். கண்களைத் துடைத்துக் கொண்டான். மிகவும் தாழ்மையுடன் ஸர்வேச்வரனது நாமங்களைச் சொன்னான். நாள் முழுவதும் பசித்தவனானாலும், அவனுக்கு ஒரு புது பலம் இருந்தது. சுற்று முற்றும் பார்த்தான். தன் பக்கல் உறங்கிய துறவியைக் காணோம்.

கீழ்வானம் வெளுத்தது. நாட்டுப்புறங்களிலிருந்து மதுரைமா நகர்க்கு வரும் அங்காடி வண்டிகள் கடகட வென்று சத்தமிட்டுச் சென்றன. இறுதி யாமத்தில் காவல் வரும் காவலாளிகள் தங்கள் உரத்த முறையொலிகளுடன் சென்றுகொண்டிருந்தனர். அதிகாலையில் 'நாட்பயிற்சி' செய்யும் யவன விரர்கள் 'டாக் டாக்' என்று தங்கள் காலணி அதிரப் பெரு வீதிகளில் நடந்து சென்றுகொண்டிருந்தனர். பாதுகாப்பிலாகாவைச் சேர்ந்த உயர்ந்த அதிகாரிகள் சிலர் அங்கு மிங்கும் தங்கள் குதிரைகள் மீது ஊர்ந்து சென்று கொண்டிருந்தனர். தேவாலயங்களில் முதல்கால பூசைக்காக அடிக்கப் பெறும் திவ்ய கண்டாநாதம் மன்னன் காதில் விழுந்தது. ஆற்றில் நீராடித் தன் அழுக்குடையை உலர்த்தி உடுத்த மன்னவன் தன் பெரும் பசிக்கு ஆற்று நீரையே அள்ளிப் பருகினான். பருகு முன் அப்பூம் புனலைப் புவநேச்வரனுக்கு அர்ப்பணம் செய்து பின் பருகினான். அவன் வயிற்றில் கனல் போன்ற உணர்ச்சி சிறிது தணிந்தது. அரண்மனைக்கு ஓடினான். அரண்மனை உள்ளே தன்னை எப்படியும் யாராவது அறிந்துகொள்வார்கள் என்று நம்பினான். வேகமாக உடல் அநுமதித்தமட்டும் சென்றான். தோரண வாயிலில் பேரார வாரம். பாண்டியன் கூடல் அழகப்பெருமான் ஆலயத்திற்குச் செல்வதாக மக்களிடை ஒரு பெருங்கூச்சல் எழுந்தது. ஒருவரை யொருவர் நெருக்கி மக்கள் மேல் வீழ்ந்து மன்னவனைக் காண விரைந்து மண்டினர். மன்னவனும் இப்புது மன்னவனைக் காணக் குதூஹலித்துப் பல்லாயிரக் கணக்காகக் குழுமிய மக்களிடை நெருக்குண்டு நின்றான். குதிரைகளின் அணிவரிசையும், யானைகளின் மணி யோசையும், அதிகார புருஷர்களின் அதட்டல்களும், மெய்க்காவலான யவன வீரரின் காலணிகளின் அதிர்ச்சியும், நிற்பவர் காதைச் செவிடாக்கின. யவந நாட்டுப் பெண்மணிகள் பொன் தீவட்டி ஏந்த, மறையவர் மங்கலச் சொல் ஒலிக்க, மங்கல வாத்யங்கள் விண்ணை அதிரச் செய்ய, தங்கப் பல்லக்கு ஒன்றில் ஒரு வடிவழகன் உட்கார்ந்து வந்தான். ஆரவாரம் பெரிதாயிற்று. 'மன்னா போற்றி' 'மண்டலத் திறையே போற்றி' 'தென்னா போற்றி' 'தெவ்வர்தம் நமனே போற்றி' என்ற பேரிரைச்சல் வானைப் பிளந்தது. மன்னவன் தலை நிமிர்ந்து தங்கப் பல்லக்கைப் பார்த்தான். திடீரென்று மூர்ச்சையானான். பெருங் குழப்பத்துடன் ஜனங்கள் அவனைப் பிடித்தனர். 'ஐயோ! பசியால் வாடியவன் போலும்!' என்றார் சிலர். 'நோயுற்றான் போலும்' என்றார் சிலர். 'பரதேசியானாலும் முகத்தில் பொலிவைப் பார்' என்றார் சிலர். இப்படி

யிருக்க, ஒரு வீரன் ஓடிவந்து 'ஏதேனும் தீங்கு வந்ததோ? அம்மனிதன் மக்களால் மிதியுண்டானோ? அரசி அறிய விரும்புகிறார்' என்றான். நம் மன்னன் அரசி முன் நிறுத்தப்பட்டான். அவனுக்கு ஒன்றும் குறையில்லையென்பதை யறிந்த அரசி தன் பல்லக்கைப் போகச் சொல்லுமுன் அரசியைப் பார்த்தும், அவள் தன்னை யறிந்துகொள்ளாததைக் கண்டு மறுபடியும் மூர்ச்சை யானான். சிறிது நேரத்திற்கெல்லாம் கூட்டம் கலைந்தது. அரசன் மாத்ரம் தரையில் கிடந்து புரளுகிறான். 'என்ன மாயம்! என்ன மாயம்! என்னைப் போலவே ஒரு புருஷ னல்லவா பல்லக்கில் போகிறான்? அரசியும் என்னைத் தெரிந்து கொண்டாளில்லையே! ஐயோ! நான் யார்? நிஜமாகவே பைத்யமா? ஐயோ! நான் நானே இல்லை. நான் யாரோ?' என்று தன் தலையைப் பிய்த்துக் கொண்டான். தலையில் அடித்துக்கொண்டான்.

அன்று ஒரு ஸத்ரத்தில் முதன் முதலாக இரந்து உண்டான். மத்தி யானத்தில் அரசனது கொலு மண்டபத்தில் வேடிக்கை பார்க்கச் சென்றான். குறை கேட்டலும், ந்யாயம் வழங்கலும், ஏழைகளுக்கு உபகரித்தலும், இனிய முக மலர்ச்சியுடன் ப்ரஜைகளுடன் பழகுதலையும், ப்ரஜைகள் அன்புடன் 'வீரவன்மன் வாழ்க' 'வீரவன்மன் வாழ்க' என்று கூச்ச லிடுவதையுங் கண்ட மன்னவன் பெருவியப் படைந்தான். 'ஐயோ! நானில்லாமல் இந்நாடு வெகு அழகாகப் பாலிக்கப்படுகிறதே! மக்கள் மகிழ்கின்றனரே! என் ஆற்றல் இவ்வளவுதானா! சீ சீ! என் ஜந்மமே! என் பாபமே! என் வீட்டிலேயே திருடனைப் போல் அலைகின்றேனே' என்றான்.

ஸாயங்கால மாயிற்று. அரண்மனையின் உட்புறத்தில் விஹார மண்டபத் தில் மன்னவன் ஒரு கம்பத்தின்பின் ஒளிந்து நின்றான். தன்னைப்போன்ற புது அரசனும், தன் அரசியுமாகக் கைகோத்து உலவுவதைக் கண்டான் 'கண் மணீ! நாம் பள்ளி யறைக்கே சென்று விடலாம். காலை முழுவதும் ராஜ்ய காரியங்களில் உழன்ற எனக்கு நீயே உயிர் தரவேணும்' என்றான். அரசி புன்னகையுடன், தன் கண்களில் காதல் ததும்ப, 'நாதா! பஞ்சணையில் தாம் வீற்றிருந்தால், அடியாள் யாழ் கைக்கொண்டு இன்னிசை எழுப்பிக் களிப்பிக்கிறேன்' என்று சொல்லிப் புது அரசனுடன் பள்ளி யறையில் நுழைவதையும், பரிஜனங்கள் 'வீரவன்மன் வாழி! விஜயவன்மன் வாழி' என்று ஆரவாரித்து அகன்றதையுங் கண்டு கம்பத்தின் பின் அரசன் மூர்ச்சை யானான்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

நற்போது போக்கு

[ஸ்ரீமதி ஸௌந்தர்யவல்லி அம்மாள், பிராமணத் தெரு, சைதாப்பேட்டை]

ஞானம்.—[திடீரெனப் படுக்கையை விட்டெழுந்து] ஈதென்ன கனவா? நனவா? நினைக்க நினைக்க ஆச்சர்யமாக வல்லவோ இருக்கிறது! கருணை நிறைந்த அத்திருக்கண்களில்தான் எத்தனை கனிவு!

ஸுகுண.—[தற்செயலாக வந்து] என்ன ஞானம்! எதையோ எண்ணி எண்ணி நீயே ஆநந்த மடைகிறாயே! உன் ஆநந்தத்தில் எனக்குப் பங்கு கிடையாதா?

ஞானம்.— ஆ! ஸுகுணவா! வா. உன் வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இன்று நடந்த ஸம்பவத்தை உயிர்த் தோழியாகிய உன்னிடம் உரைக்காதிருக்க முடியுமா? [சொல்ல ஆரம்பிக்கிறாள்; சொல்ல முடியாமல் தாமதிக்கிறாள்.]

ஸுகுண.— என் தயங்குகிறாய்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! தெளிவாக உடனே சொல்.

ஞானம்.— இல்லை ஸுகுண! அவஸரப்படாதே; கேள்.

சங்கமுடன் சக்கரமும் சதிருடன்தன் கரமேந்தி
பங்கயம்போல் முகமுடையான் பதுமையுட னெதிர்த்தோன்றி
சங்கடமே னினியுனக்குச் சரணமெனை யடையென்றான்

ஸுகுண.— [இடை மறுத்து] ஆஹா! நீயே தந்யை. அவ்யாஜ வத்ஸலனான சரண்யன் தானாக வந்து உன்னை உய்யக்கொண்டான் போலும். உடனே அவன் திருவடியில் பணிந்து உன்னை ஆட்கொள்ளும்படி வேண்டிக்கொண்டாயா?

ஞானம்.— ஸுகுண! நான் சொல்வதைச் சற்று நிதானித்துக் கேள். சங்க சக்ராதி சிந்நங்களைக் கண்ட மாத்ரத்தில் பசற்றமுடன் வந்தவனைப் பரமபத நாதனாக இக்கலியுகத்தில் பாவிக்க முடியுமா? அதற்காக:

அங்கவனை யாரென்ன வதற்கரியான் என்றனனே.

ஸுகுண.— ஓஹோ! யாரென்று கேட்டதற்கு அவன் ஹரி என்று உத்தரம் சொன்னானா? என்னே அவன் கருணை! என்னே உன் ஸுக்ருதம்! அப்போது அவனைப் பரந்தாம னென்று அறிந்துகொண்டனையா?

ஞானம்:— இல்லை; இன்னும் ஸந்தேஹம் தெளிய இவ்வாறு வினவினேன்.

அரியேறே யாமாகில் அரவணையைக் காணவிலே
பரிவுடனீ ரூர்கின்ற பறவையுடன் வரவில்லை
சுரிகுழலா ளென்முன்னே சூழ்ச்சியுட னரியென்றீர்
அறமிதுவோ வெனவிரைவில் அச்சுதன்யான் என்றனனே.

ஸுகுண:—பறவை யேறு பரம்புருடன் உனைப் பணிகொள்ளும் பொருட்டு மெல்லடிகள் வருந்தப் பாதசாரியாக வல்லவோ வந்தான்? அங்ஙனம் வந்தவனைப் பாம்பணையையும் என் சுமந்து வரவில்லை என்று கேட்டாய்? என்ன ஸாஹஸமடீ உனக்கு? அது மட்டுமா? நீ சூழ்ச்சியுடன் வந்தா யென்றும், இது அற மில்லை யென்றும் பேசினுயே! நீ தொடுத்த சொல்லம்புகளைத் தடுக்க வெண்ணி விரைவில் 'அச்சுதன் யான்' என்று அவன் தன்னை அறிவித்துக்கொண்டான். அச்யுதன் என்பதற்கு, 'வீழ்ச்சி யில்லாதவன்; தன்னுடைய திவ்ய பதவியிலிருந்து ஒரு காலும் நழுவாதவன்; ஆச்ரிதர்களை நழுவ விடாதவன்' என்பவை பொருள்கள். இத்தகைய கல்யாண குணங்கள் கொண்ட அவன், தன்னை 'அச்சுதன்' என்று சொல்லிக்கொண்டதற்கு நீ என்ன உரைத்தாய்?

ஞானம்:— என்ன உரைப்பது?

அச்சுதனே யாமாகில் அமருலகைத் தான் மறந்தீர்
நச்சியுமைத் தொழுதேத்தும் நல்லடியா ரைத்துறந்தீர்
எச்சரிக்கை கொண்டுவர ஏதுவெது வென்றேன்யான்
அச்சமுனக் கேனறிவாய் அபலே! யான் கண்ணனென்றான்.

ஸுகுண:—என்ன அழகான பதில்! 'சந்த்ர மண்டலம் போன்ற திருமுக மண்டலமும், அன்றலர்ந்த செந்தாமரை போன்ற திருக்கண்களும், மகர குண்டலம் ஒளி வீசுகின்ற காதுகளும், புன்சிரிப்புள்ள திருவாய் மலரும், திருத்துழாய் மாலே தரித்த மார்பும், கற்பக் காவென நற்பெருதோள்களும், பிறவிப் பெருங் கடல் கடத்தற்குப் புணையாகிய திருவடிகளும், காள மேகம் போன்ற திருமேனியும், சங்க சக்ராதி பஞ்சாயுதங்களுடனும், கிரீடம் முதலிய திவ்யாபரணங்களோடும், கௌஸ்துப மணியும், கமலச் செல்வியும், வநமாலிகையும் திருமார்பில் இலங்க, அந்திபோல் நிறத்தாடை யணிந்து, உன்னைத் திருத்திப் பணி கொள்ளவேண்டு மென்று வந்த ஸ்ரீ வைகுண்ட நாதனை நீ தேவதேவ னென்று ஏற்றுக்கொண்டு வணங்கி வழிபடாமல் மேன்மேலும் அவனைப் பரீக்ஷிப்பதுபோல் பல கேள்விகள் கேட்டுவிட்டனையே! தீந தயாளனை தாமோதரன் உன் அச்சத்தையும் ஐயத்தையும் தவிர்க்க எண்ணித் தன்னைக் கண்ணன் என்றான். அப்போது நீ என்ன சொன்னாய்?

ஞானம்:—கண்ணபிர ணுகுங்கால் காலிகளும் கன்றுமிலே
வண்ணமுறும் குழலுமிலே வாயளவும் வெண்ணெயிலே
எண்ணமும்யான் அறியகிலே னென்றனுமே ஏமமதாய்த்
தண்ணருளால் யான்வணங்கும் தனியுருவம் காட்டினனே.

ஸுகுண:—ஏதேது ! கண்ண னென்றாலும் நீ கருத்தில் கொள்ள வில்லையா ? தண்ணருளால் உனக்குக் காட்டிய அத்தனி யுருவம்தான் யாது ? விளங்க உரை.

ஞானம்:—ஆகமநூல் தாம்தேடும் அகிலசகன் ஞதனவன்
போகமுயர் வீடுதரும் புண்ணியம்சேர் கடிகைதனில்
யோகமுறும் மூர்த்தியுடன் யோகியர்க்காய்ச் சிலைநின்ற
மாகருணை நிதிசிங்கன் மாதவனைக் கண்டேனே.

ஸுகுண:—ஆஹா ! உனக்குக் காட்சி யளித்தவன் அழகிய சிங்கனா ? உன் பாக்யமே பாக்யம். அப்போதேனும், 'அந்தியம் போதில் அரியுருவாகி அரியை யழித்தவனைப் பந்தனை தீரப் பல்லாண்டு' பாடிப் ப்ரார்த்தித்தாயா ? ஆஹா ! யோகிகளும் காண வரிய நரஹரியைக் கண்டாய். அவனோடு உரை யாடவும் பெற்றாய். உன் பாக்யமே பாக்யம். உன் ஸ்நேஹத்தினால் நானும் இவைகளைக் கேட்டுப் பேறு பெற்றேன். [ஸந்நிதியில் கண்டாநாதம் கேட்கிறது.] இது ஸத்யம். வா ; ஆலயத்துக்குச் சென்று அர்ச்சாரூபியான அமலனை ஸேவிப்போம்.

[இருவரும் ஸந்நிதிக்குச் சென்று பெருமாளை ஸேவித்து இன்புறுகின்றனர்.]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸர்வதாரி ௵ தை (மகர) ௴

14— 1—49	1௳	வெள்ளிக்கிழமை	...	பௌர்ணமி திதி: ஸங்க்ராந்திப் பண்டிகை: உத்தராயண தர்ப்பணம்
15— 1—49	2௳	சனிக்கிழமை	...	தைப்பூசம்
17— 1—49	4௳	திங்கட்கிழமை	...	ஸ்ரீ திருமழிசைப்பிரான் திருநக்ஷத்ரம்
20— 1—49	7௳	வியாழக்கிழமை	...	மகா க்ருஷ்ண ஷஷ்டி—ஸப்தமி திதி த்வயம்: ஸ்ரீ கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்
21— 1—49	8௳	வெள்ளிக்கிழமை	...	மகர க்ருஷ்ண அஷ்டமி திதி
25— 1—49	12௳	செவ்வாய்க்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
28— 1—49	15௳	வெள்ளிக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை: ஸ்ரீ அஹோபில மடம் 42-ம் பட்டம் ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
1— 2—49	19௳	செவ்வாய்க்கிழமை	...	மகர சுக்ல சதுர்த்தி திதி
2— 2—49	20௳	புதன்கிழமை	...	அதிதி
5— 2—49	23௳	சனிக்கிழமை	...	ரத ஸப்தமி
9— 2—49	27௳	புதன்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
10— 2—49	28௳	வியாழக்கிழமை	...	ஸ்ரீ அஹோபிலமடம் 38-ம் பட்டம் திருக்குடந்தை ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
11— 2—49	29௳	வெள்ளிக்கிழமை	...	மகர சுக்ல த்ரயோதசி திதி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

நமது ஆசாரங்களும் அநுஷ்டாநங்களும்

[திருமண் காப்பு விஷயம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.]

[ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B.A., மேல்மாம்பலம்]

'ஏண்டா! ரங்கா! உனக்கு நான் க்ருஷ்ணனுடைய கதைகளை யெல்லாம் சொல்லியிருக்கிறேனே! ஞாபகம் இருக்கிறதோ?' என்று கேட்டார். 'இருக்கிறது தாத்தா' என்றான் பேரன்.

"யமுனை யாற்று மடுவில் காளியன் என்று ஒரு துஷ்ட ஸர்ப்பம் இருந்தது. அதனுடைய விஷத்தையும் அட்டஹாஸத்தையும் நோக்கிய ஜனங்கள் ஒருவரும் அந்த மடுவின் பக்கம் போகிறதேயில்லை. க்ருஷ்ணன் அதனுடைய கொட்டத்தை அடக்கிவிடவேண்டும் என்று திருவுள்ளம் பற்றினார். உடனே அந்த நாகத்தின் தலையில் குதித்து, அது தூக்கும் தலைகள் ஒன்றன்மேலொன்றாக ஏறிக் கூத்தாடி நன்றாகத் தொகைத்து அதன் கொழுப்பை அடக்கி விட்டார். கடைசியில் அந்தப் பாம்பரசனுடைய பத்தினிகள் வந்து பெருமாளை வேண்டிய பிறகு அதனுடைய உயிரைக் காப்பாற்றினார். ஆனால் அந்தப் பாம்பு இனி அந்த மடுவிலேயே இருக்கப்படாது என்றும், அதை விட்டு வெளியேறிச் சமுத்திரத்துக்குப் போய்விடவேண்டும் என்றும் உத்தர விட்டார். அந்த மடுவை விட்டுவிட்டு வெளியே போவதற்குக் காளியன் பயப்பட்டு, 'ஸ்வாமி! கருடனுக்கும் எனக்கும் ஜன்மப் பகை யாயிற்றே! ரிஷியின் சாபத்துக்குப் பயந்து கருடன் இந்த மடுவுக்கு வருகிறதில்லை. இதை விட்டுக் கிளம்பிய அடுத்த நிமிஷமே அவர் வந்து என்னைக் கொன்றுவிடுவரே. நான் இதை விட்டு எப்படி வெளிக்கிளம்புகிறது?' என்றான். உடனே க்ருஷ்ணன், 'நீ பயப்படாதே. நான் உன் தலையில் நர்த்தனம் பண்ணினேன் அல்லவா? என் காலடியின் அடையாளம் உன் தலையில் பதிந்திருக்கிறது. அது எப்போதும் உன் தலைமேல் இருந்துகொண்டேயிருக்கும். அந்த அடையாளமே உனக்கு ரக்ஷையாக இருக்கும். அதைப் பார்த்த கருடன் உனக்கு ஒரு விதமான கெடுதலும் செய்யமாட்டான். நீ ஸமுத்ரத்துக்குப் போகலாம்' என்று அருளினார். அன்று முதல் பகவானுடைய திருவடியின் சிந்நம் அந்தப் பாம்புக்கு ஒரு பெரிய ரக்ஷாபந்தநமாக ஆகிவிட்டது" என்றார் தாத்தா. பையன்களெல்லாம் இதை மிகவும் ஸ்வாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். தாத்தா மறுபடியும் தொடர்ந்தார்.

'மஹா துஷ்டனாகிய காளிய ஸர்ப்பத்தின் கொட்டத்தை அடக்க அதன் மேல் பகவான் நர்த்தநம் செய்து, அதனால் அவன் தலையில் ஏற்பட்ட தமது திருவடியின் அடையாளத்தைக் கருடாழ்வானால்கூட அவனுக்கு ஒரு கெடுதலும்

செய்யமுடியாத பெரிய ரக்ஷாபந்தநமாகப் பண்ணிவிட்டார் பகவான். மஹா பாபியான ஒரு பாம்புக்கு இப்படி அருள் செய்த கருணை வள்ளலாகிய பெருமாள், தமது திருவடியின் அடையாளத்தை மிகவும் பத்தியோடு தினமும் தரிக்கும் பாகவதர்களுக்கு இதையே ஒரு ரக்ஷையாகப் பண்ண அருள் செய்ய மாட்டாரோ? நாம் தினமும் தரித்துக்கொள்ளும் ஊர்த்வ புண்ட்ரமாகிய திருமண் காப்பு பெருமாளுடைய திருவடியின் சிந்நமே. அதை நாம் தரித்துக் கொள்ளும்போதும் பெருமாளுடைய திருவடியைப்போல் ஆகார முள்ளதாகவே தரித்துக்கொள்ளவேண்டும். இப்படித் தரிப்பவன் மஹா பரிசுத்தனுக ஆவதோடு, அவன் பக்கத்தில் கெடுதியைச் செய்யும் பூதங்கள் பிசாசங்கள் ஒன்றும் அவனை நெடுங்க முடியாது. வேதாளங்களும் ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸுக்களும் அவனைக் கண்டால் நடுங்கும். பெருமாளைச் சேர்ந்தவன் என்பதைக் காட்டும் இந்த சிந்நத்தைப் பார்த்து உலகத்தை யெல்லாம் ஆட்டிவைக்கும் யமதர்ம ராஜாவும் அவருடைய கிங்கரர்களும் பயந்து ஒதுங்குகிறுர்கள் என்றால் பார்த்துக்கோயேன்' என்றுர்.

'பெருமாளுடைய சிந்நத்தைப் பார்த்தால் யமதர்மன் ஏன் பயப்பட வேணும்?' என்று கேட்டான் பேரன்.

'நீ கெட்டிக்காரப் பயல்டா! கேட்கிற கேள்வி சின்னதாக இருந்தாலும் விஷயம் மிகப் பெரிதாய் இருக்கிறது. சொல்லுகிறேன் கேள்' என்று தொடர்ந்தார் தாத்தா.

'ஒரு ராஜாவுக்கு மிகவும் அழகான பழ மரங்களும் புஷ்பச் செடிகளும் நிறைந்த உத்யாநவநம் இருக்கிறது. அதற்குக் கட்டுக்காவல் என்று இல்லாவிட்டால் ஊரெல்லாம் வந்து அதை அழித்துவிடும். அதனுல் ராஜா அதை ஒருவரும் அழித்துவிடாதபடி காவல் காத்து ரக்ஷிக்கும்படி சம்பளம் கொடுத்து ஒரு தோட்டக்காரனை அதற்கு எஜமானனுக ஏற்படுத்துகிறுன். தோட்டத்துக்குள் நுழைந்து அதை அழிக்கவரும் ஊர் ஜனங்களை யெல்லாம் அவன் விரட்டியடிக்கிறுன். அவர்களும் அவனைக் கண்டு நடுங்குகிறுர்கள். ஆனுல் தினமும் ஸாயங்காலம் ராஜாவின் பிள்ளைகளும் பெண்களும் அதற்குள் வந்து விளையாடிக் கொட்டம் அடிக்கிறுர்கள். பழங்களையும் புஷ்பங்களையும் பறிக்கிறுர்கள். ஆனுல் தோட்டக்காரன் அவர்களிடம் ஒரு வார்த்தை சொல்ல முடியுமோ? அவர்களுக்குக் கெதிரில் கையைக் கட்டிக்கொண்டு தூரத்தில் தானே நிற்க வேண்டும். என்னடா சொல்லுகிறுய்?' என்று பேரனைக் கேட்டார் தாத்தா.

'ஆமாம் தாத்தா. தோட்டம் ராஜாவினுடையது. அதனுல் அவருடைய பிள்ளைகளைத் தோட்டக்காரன் ஒன்றும் செய்ய முடியாதுதான்' என்றுன் பேரன்.

'அதே மாதிரி லோகத்துக்கெல்லாம் ராஜா பகவான்தான். வைஷ்ணவர்களாகிய நாமெல்லாம் அவரைச் சேர்ந்தவர்கள்; அவருடைய குழந்தைகள்; அவருடைய அன்புக்குப் பாத்ரமானவர்கள். யமதர்ம ராஜன் பெரு

மாளுடைய வேலைக்காரன்; மற்ற ஜனங்களுக்கு, அவர்கள் புண்ய பாபத்துக்குத் தகுந்தவாறு வெகுமதியோ தண்டனையோ கொடுப்பதற்காக ஏற்பட்டவன். அந்த ஜனங்களுடைய ஆயுள் முடிந்தபிறகு அவனுடைய கிங்கரர்கள் அந்த ஜனங்களின் உயிரைப் பாசங்களால் கட்டி இழுத்துக்கொண்டு தர்மராஜா முன்னே விடுவார்கள். அவனும் அவர்களை விசாரித்து நீதி வழங்குவான். ஆனால் இந்தத் தர்மராஜாவின் அதிகாரம் பெருமாளைச் சேர்ந்தவர்களிடம் செல்லாது. ஒரு தடவை அவனுடைய கிங்கரர்கள், பெருமாளுடைய பக்தராகிய மார்க்கண்டேயரை அணுகப் போய், அங்குப் பட்ட பாடு போதும் போதும் என்று ஆகிவிட்டது ' என்றார்.

' மார்க்கண்டேயர் கதையையும் கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கோ தாத்தா ' என்றான் பேரன்.

'சொல்லுகிறேண்டாப்பா ராஜா ! சொல்லுகிறேன். கவனமாய்க் கேள்' என்று ஆரம்பித்தார் தாத்தா.

' மார்க்கண்டேயர் பெருமாளுடைய பக்தர்களில் சிறந்தவர். நல்ல ஆசார அநுஷ்டான சீலர். சாஸ்த்ரங்களை நன்றாக அறிந்தவர். 'மோக்ஷத்தைக் கொடுக்கிறவர் ஜனார்த்தனன்தான்; அவரை வசீகரிக்கும் வழி அவர் திருவடிகளில் சரணாகதி பண்ணுகிறதுதான்; பெருமாள் நிச்சயம் காப்பாற்றுவார் என்கிற த்ருடமான நம்பிக்கையோடு அவர் திருவடிகளில் ப்ரபத்தி பண்ண வேணும்; ப்ரபந்நனுக்கு நிச்சயம் மோக்ஷமுண்டு; ப்ரபந்நனைத் தவிர வேறொருவருக்கும் மோக்ஷமில்லை ' என்கிற விஷயங்களைத் தாமும் அறிந்து அநுஷ்டான பர்யந்தமாக்கியதோடு, தம்மை வந்து ஆச்ரயிப்பவர்களுக்கும் உபதேசிக்கிறவர். ஆகையால் பெருமாள் திருவடிகளில் ப்ரபத்தி பண்ணிவிட்டுப் பயமில்லாமல் எழுந்தருளியிருந்தார் அவர். இப்படியிருக்கும்போது ப்ரம்மாவால் அவருக்கு இவ்வளவுதான் என்று அளவிடப்பட்டிருந்த ஆயுள் முடிந்துவிட்டது. உடனே அவரைக் கட்டி இழுத்துக்கொண்டு வருவதற்கு யமதர்மனுடைய கிங்கரர்கள் பாசங்களையும் மற்ற ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு அவருடைய ஆச்ரமத்துக்கு வந்தார்கள். தம்முடைய திருவடிகளில் சரணமடைந்திருந்த முனிவரைப் பரமபதத்துக்கு அழைத்துக்கொண்டுபோகப் பெருமாளுடைய அத்தாணிச் சேவகர்களும் வந்திருந்தார்கள். வீரத்தன்மை வாய்ந்த ம்ருகங்களில் ஒன்று, தன்னுடைய இரையை இன்னொரு ம்ருகம் எடுத்துச் சென்றால் பார்த்துக்கொண்டு நிற்குமோ ? அதன்மேல் பாய்ந்து சண்டையிடுமல்லவா? அப்படியே யம கிங்கரர்கள் தங்களுக்கே உரியதென்று நினைத்திருந்த மார்க்கண்டேயருடைய உயிரைத் தங்களிடமிருந்து பிடுங்க வந்த விஷ்ணு தூதர்களைக் கண்டு ஆத்ர மடைந்து அவர்களை எதிர்த்தார்கள். பிறகு ஏற்பட்ட கைகலப்பில் யம தூதர் தோல்வியடைந்தார்கள் என்றும் சொல்லவேண்டுமோ ? நன்றாக அடிபட்ட இந்தக் கிங்கரர்கள் கடைசியில் யமதர்மராஜனுடைய காலடியில் போய் விழுந்தார்கள். விஷயம் என்னவென்று அவன் கேட்க, நடந்ததை ஒருவிதமாகச் சொல்லி முடித்தார்கள். தன்னுடைய கிங்கரர்கள்

மூடர்களாக இருந்தாலும் யமதர்மன் மிகவும் ஞான முள்ளவன். நாசிகேதஸ்ஸுக்குப் பரம ரஹஸ்யமான அத்யாத்ம விஷயத்தை உபதேசித்தவன் அல்லவா? தன்னுடைய வேலைக்காரர்களுடைய தலைவனை அருகில் அழைத்து ரஹஸ்யமாக அவன் காதுகளில் உண்மையை உணர்த்தினான்.

'நான் உலகத்தில் மற்ற ஜனங்களுக்குத்தான் எஜமானனே யொழிய, பெருமாளைச் சேர்ந்தவர்களுக்கு அல்ல. இன்றையிலிருந்து நான் உங்களுக்குக் கொடுக்கிற உத்தரவு இதுதான். நீங்கள் உங்கள் கடமையைச் செய்யும் பொழுது பெருமாளைச் சேர்ந்தவர்களின் பக்கத்தில்கூடப் போகாதீர்கள்' என்றான். 'பெருமாளைச் சேர்ந்தவர்கள் என்று நாங்கள் எப்படி அறிகிறது?' என்று கிங்கரன் கேட்க, அவர்களுடைய லக்ஷணங்களை யெல்லாம் தர்மராஜன் விளக்கிக் கூறினான்' என்று முடித்தார் தாத்தா.

'வைஷ்ணவர்களுடைய லக்ஷணங்களை யெல்லாம் சொல்லுங்கோ தாத்தா' என்றான் பேரன் உத்ஸாஹத்தோடு. 'எல்லாம் உனக்குச் சொல்லத்தான் போகிறேன். ஆனால் இன்றைக்கு இல்லை. இந்த லக்ஷணங்க ளெல்லாம், வைஷ்ணவர்களுக்கு இருக்கவேண்டிய ஆத்ம குணங்களையும் வெளி அடையாளங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இந்த வெளி அடையாளங்களில் முக்கியமான முதல் அடையாளம் நெற்றிக்கு நாம் இட்டுக்கொள்ளுகிற ஊர்த்வ புண்ட்ரம்தான்' என்றார் தாத்தா. விஷயங்கள் குழந்தைகளின் மனத்தில் நன்றாகப் பதிந்தது என்று தாத்தாவுக்குத் தெரிந்தது. அவருக்குக் கொஞ்சம் த்ருப்தி உண்டாகியது. மறுபடியும் தொடர்ந்து விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தார்.

'நாமெல்லாம் பெருமாளைச் சேர்ந்தவர்கள் என்று காட்டுகிற முக்கியமானதும் வெளிப்படையானதுமான முதல் அடையாளம் இந்த ஊர்த்வ புண்ட்ரம்தான். இது, ஒரு வேலைக்காரன் தன்னுடைய எஜமானனின் பெயர் எழுதிய டவாலியைப் போட்டுக்கொள்ளுகிற மாதிரி. பதிவ்ரதையாக இருக்கிற ஒரு பெண் தன் புருஷன் கட்டின திருமாங்கல்யக் கயிற்றைக் காப்பாற்றுகிற மாதிரி என்றாலும் தகும்' என்றார்.

உடனே பேரன் பிடித்துக்கொண்டான். 'வேலைக்காரனுக்கு எஜமானன் சம்பளம் கொடுக்கிறான். அதனால் அவன் டவாலியைப் போட்டுக் கொள்ளுகிறான். தன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளும் பெண்ணினிடம் அவளுடைய புருஷன், தான் வேறு அவள் வேறு என்று இல்லாதபடி தன்னையே கொடுத்துவிடுகிறான். அவளிடம் தன் அன்பைக் காட்டுகிறான். தன்னுடைய ஆதரவைக் காட்டுகிறான். இன்னும் அவளுக்கு கொடுக்காதது ஒன்றுமே இல்லை என்னும்படி நடந்துகொள்கிறான். பெருமாள் நமக்கு என்னத்தைக் கொடுக்கிறார்? அப்படி ஏதாவது கொடுத்தாலும், அவரிடம் நமக்குள்ள பக்தி மனதுக்குள் இருக்கவேணுமேதவிர, வெளி வேஷத்தினால் என்ன ப்ரயோஜநம்?' என்றான். பேரன் கேட்கும் புத்திசாலித்தனமான கேள்விகளால் தாத்தா மிகவும் ஸந்தோஷமடைந்து அதற்குப் பதில் சொல்லலானார். [தொடரும்]

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

செய்திகள்

ஒரு ஸம்சயம்

நம் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை அநுஸரித்து 'நயமயூகமாலிகா' என்கிற க்ரந்தம் ஸ்ரீ அப்பைய தீக்ஷிதரால் இயற்றப்பட்ட தென்பது ஸுப்ரஸித்தம். இந்த க்ரந்தம், ஸ்ரீ உப்பிலியப்பன் ஸந்நிதி ஸ்ரீ. உப. நவநீதம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியால் 1916ஸு அச்சிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த ப்ரதியில், 𑌸𑌹𑍋𑌪𑌾𑌯𑍍𑌯𑌧𑌿கரணத்தில், 167-ம பக்கத்தில்,

“ 𑌕𑌿𑌂𑌚 𑌪𑌰𑌶𑌾𑌣𑍋 𑌨𑌾𑌮 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌦𑍋𑌷𑌃 𑌶𑌬𑍍𑌦𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌽𑌨𑌙𑍍𑌗𑌾𑌵𑌯𑌵𑌾𑌚𑍍𑌯𑌪𑌕𑍍𑌷𑌵𑌿 𑌕𑍍𑌷𑌨𑌿𑌤𑍍𑌯𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌦𑍍𑌵𑌿𑌶𑌾𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 । 𑌨𑌹𑌿 𑌪𑌾𑌦𑌕𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌪𑌦𑌂 𑌪𑌾𑌰𑌾𑌹𑌕𑍍𑌵𑌾𑌦𑌕𑌂 𑌪𑌾𑌦𑌾𑌬𑌾𑌧𑌾𑌦𑍍𑌯𑌪𑌦𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌪𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌯𑍋 𑌦𑍍𑌵𑌯𑌸𑌪𑌰𑌿𑌵𑍀𑌕𑌾𑌰 𑌪𑌾𑌪𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌯𑌾𑌪 𑌪𑍍𑌰𑌤𑍀 𑌨𑌤𑍍𑌯𑌯𑍋𑌸𑍍𑌸𑌨𑌰𑌪𑌾𑌙𑍍𑌗𑌤𑌾 𑌪𑌰𑌶𑌾𑌣𑍍𑌵𑌾 𑌨𑌤𑍍𑌯𑌯𑍋𑌸𑍍𑌤 𑌨𑌤𑌾𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 ”

என்று ஒரு பங்க்தி காணப்படுகிறது. இதனுடைய அந்வயம் நன்ருக விளங்கவில்லையாதலால், பண்டிதர்கள் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா மூலம் இதனைத் தெளிவாக அந்வயித்துக் கொடுக்கும்படி ஸவிநயம் ப்ரார்த்திக்கிறேன்.

'𑌕𑌶𑍍𑌚𑌨 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍁𑌃'

பண்ணுருட்டி ஸ்ரீ மஹாராதநம்

ஸ்ரீ அஹோபில மடத்துத் திவ்யாஸ்தாநத்தில் 40வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் 26-வது வார்ஷிக மஹாராதந மஹோத்ஸவம் வழக்கப்படி பண்ணுருட்டி அக்ரஹாரத்தில் நாளது தைமீ 11௳ (24—1—49) திங்கட்கிழமை காலையில் வேதபாராயண அத்யாபக க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபங்களுடன் உபக்ரமித்து மூன்ருவது நாள் வீதி உத்ஸவம் சாத்துமறை முதலியவைகளுடன் நடக்கிறபடியால், அம் மஹோத்ஸவத்திற்கு ஸ்வாமிகள் முன்னதாகவே எழுந்தருளிக் கைங்கர்யத்தைப் பூர்த்தி பண்ணி க்ருதார்த்தர்களாவதுடன், இடையிடையே மஹான்களால் நடத்தப்படும் உபந்யாஸங்களையும் திருச்செவி சாத்தி ஆநந்திக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

சேட்லூர். பார்த்தஸாரதி அய்யங்கார், பண்ணுருட்டி.

* * * *

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

நாளது ஸர்வதாரிஸு கார்த்திகைமீ 4௳ (19—11—48) வெள்ளிக்கிழமை ம்ருகசீர்ஷ நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில், ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத்

ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம், விழுப்புரத்துக் கடுத்த பெரும்பாக்கம் அக்ரஹாரத்தில் விசேஷமாக நடைபெற்றதென்றும், அம்மஹோத்ஸவத்தை உள்ளூர் அக்ரஹாரிகளும் மற்றும் சுற்றுப்புற அக்ரஹார வாஸிகளான ஸ்ரீ ஸ்வாமியின் அடியார் திரளும் உடனிருந்து அதை நடத்திவைத்து ஸ்ரீ ஸ்வாமியின் திருவருளுக்குப் பாத்ர மானர்களென்றும் பெரும்பாக்கம் ஸ்ரீ. உப. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி அறிவிக்கிறர்.

* * * *

ஸ்ரீ கல்யாணபிவர்த்திநீ ஸபை, மதுராந்தகம்

ஷை ஸபையின் விசேஷக் கூட்ட மொன்று 27-7-48 செவ்வாய்க்கிழமை யன்று பகல் 12-மணிக்குக் கலாசாலை ப்ரார்த்தநா மண்டபத்தில், ஷை கலாசாலை கௌரவாத்யக்ஷர் ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி தலைமையில் கூடிற்று. அப்போது இவ்வர்ஷத்து ஷை ஸபா கார்ய நிர்வாஹத்துக்காக, S. R. ஸ்ரீநிவாஸன், M. V. லக்ஷ்மீ நரஸிம்ஹன் என்னும் இருவர் கார்யதர்சிகளாகவும், P. N. க்ருஷ்ணமாச்சாரி, V T. லக்ஷ்மீ நரஸிம்ஹன், P. S. நரஸிம்ஹன் ஆகிய இம்மூவர் ஆலோசனைக் கமிட்டி அங்கத்தினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஷை ஸபையின் ஏழாவது வார்ஷிக மஹோத்ஸவம், 12—9—48 ஞாயிற்றுக்கிழமை பகல் 2-மணிக்கு, சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ப்ரஹ்ம ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்த்ரியார் அவர்களுடைய அக்ராஸநத்தின் கீழ் உபக்ரமிக்கப்பட்டது. அப்போது கலாசாலாத்யக்ஷரான ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, அக்ராஸநரையும், சென்னை அட்வொகெட் ஸ்ரீ. உப. S. V. வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ கார்யம் ஸ்வாமி, முதலானரையும் ஸ்ரீ அஹோபில மடத்திலிருந்து மேள வாத்யங்களுடன் கலாசாலை ப்ரார்த்தநா மண்டபத்துக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்தார். பின்னர், மங்களாசரணத்துடன் ஸபை உபக்ரமிக்கப்பட்டது. ஸ்ரீ ப்ரின்ஸ்பல் ஸ்வாமி, ஸ்ரீ சாஸ்த்ரியார் அவர்களை அக்ராஸநம் வஹிக்கும்படியும், ஸ்ரீ கார்யம் ஸ்வாமியையும் ஸ்ரீ வேணுகோபாலாசார்ய ஸ்வாமியையும் உபந்யாஸங்கள் அநுக்ரஹிக்கும்படியும் ப்ரார்த்தித்துக் கொண்டார். ஸபை அங்கத்தினர் சார்பில ஷை ஸ்வாமிகளுக்கு ஸ்வாகத பத்ரிகை ஸமர்ப்பிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீ கார்யம் ஸ்வாமி, ஸ்ரீ அழகிய சிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்ட ஸ்ரீ முகத்தை ஸேவித்து, எல்லாருக்கும் பல மந்த்ராக்ஷதைகளை விநியோகித்தார். கார்யதர்சியால் ஸபையினுடைய முன் கூட்ட நடவடிக்கைகள் வாசிக்கப்பட்ட பிறகு அக்ராஸநர் சிறியதொரு ப்ரஸங்கம் செய்தார். அதன் ஸாரமாவது:—

"இந்தக் காலத்தில் ஸம்ஸ்க்ருத பாஷை மிகவும் அநாதரிக்கப்பட்டு வருகிறது. முற்காலத்தில் ப்ராஹ்மண குடும்பங்களில் ஒவ்வொருவரும் வேத வேதாந்தங்களை வாங்மூலமாகவே ஓதிவந்தார்கள். இப்பொழுது வேத புஸ்தகம் முதல் எல்லா க்ரந்தங்களும் அச்சுப் பதிப்பிக்கப்பட்டுப் புஸ்தக ரூபமாய் வெளிவந்துள்ளன. எனினும் இவற்றை ஓதி உணர்பவர்கள் மிகச் சிலரே. மேனாட்டாருடைய நாகரிகம் வரவே, நம்மவர் யாவரும் உத்யோகாதிகள் மூலம் லோகயாத்ரையை நடத்துவதில் ஊக்கமுடையவர்களாகி விட்டனர். நம்மவர் பெரும்பாலார்க்கு ஆத்மீக விஷயமான எண்ணமே அற்றுப்போய் விட்டது. வர்ணாச்ரம தர்மங்கள் ஆதரிக்கப்படாமலே அத்யந்தம் லோபத்தை அடைந்து விட்டன. தர்மாநுஷ்டாந லோபங்கள் ஏற்பட்டுவிட்டமையால், அஸூயாதி குணங்கள் தலைவெடுத்துத் தாண்டவ மாடுகின்றன. இப்படிப்பட்ட இந்தக் காலத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் இம்மாதிரியான கலாசாலையை ஏற்படுத்தி, அதன் பரிபூர்ண நிர்வாஹத்தையும் ஏற்று நடத்திவருவதைக் காணும்போது நமது மனத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டா

கின்றது. இதுமாதிரி இன்னும் அநேக பாடஶாலைகள் ஏற்படவேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் குழந்தைகட்கு ஸம்ஸ்க்ருத பாஷையை போதிப்பதை முதற் கடமையாகக் கொள்ளல்வேண்டும். ஆதலின் யாவரும் தமது குழந்தைகளை இக் கலாஶாலைக்கு அனுப்பி ஸம்ஸ்க்ருத பாஷையைப் பயில்விப்பதன் மூலம் இக் கலாஶாலையை வ்ருத்தி செய்விக்க வேண்டுகிறேன்.''

இவ்வாறு கூறி அக்ராஸநர் தமது சொற்பொழிவை நிறுத்திக்கொண்டார். பின்னர் ஸ்ரீ கார்யம் ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத பாஷையின் மஹிமையையும், ஆத்ம குணங்களின் அவச்யத்தையும், யாவரும் ஸதாசாரத்தையும் தர்மாநுஷ்டாநங்களையும் கொள்ள வேண்டிய ஆவச்யகதையையும், ஸ்ரீ அழகிய சிங்கருடைய கல்யாண குணங்களைப்பற்றியும், அக்ராஸநருடைய பாண்டித்யம், ஸம்ஸ்க்ருத பாஷையில் அவர்க்குள்ள அபிருசி, முதலியவைகளைப் பற்றியும் விரிவாக உபந்யஸித்தார்.

பின்னர், அட்வொகெட் ஸ்ரீ. உப. S. V. வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத பாஷையின் உயர்வைப்பற்றியும், அதை அப்யஸிப்பவர்க்கு உத்யோக மூலமான ஜீவநம் கிடையாதென்று நினைப்பது தவறென்றும், ‘உத்யோகம் கிடைப்பதும், கிடைத்த உத்யோகத்தை இழப்பதும் நமது ப்ரயத்நத்தா லில்லை; ஹிரண்யன் ஸங்கல்ப’ மென்றும், வட நாட்டில் பெரிய உத்யோகம் வஹித்துவந்த செல்வவான்களெல்லாம் இப்போது அகதிகளாக நிற்பது இதற்கு உதாஹரண மாகத்தகு மென்றும், ஆதலின், நமக்குரிய ஸம்ஸ்க்ருத பாஷையையும் வேத வேதாந்தங்களை அப்யஸித்து நமது வர்ணாச்ரம தர்மங்களை ரக்ஷித்து வரவேண்டியது நமது கடமையாகு மென்றும் உபந்யஸித்தார். அநந்தரம் வ்யாகரணாத்யாபகர் ஸ்ரீ. உப. M. S. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ‘வ்யாகரணாத்யயநத்தின் ப்ரயோஜநங்கள்’ என்பதுபற்றி உபந்யஸித்தார்.

பின்னர், கலாசாலை வைஸ்-ப்ரின்ஸ்பல் வேதாந்த வாவதூக ஸ்ரீ. உப. நாராயணாசார்ய ஸ்வாமி, இக் கூட்டத்துக்கு அன்புடன் தலைமை வஹித்த அக்ராஸநர் அவர்கட்கும், ஸ்ரீ. உப. வேணுகோபாலாசார்ய ஸ்வாமிக்கும், ஸ்ரீ அழகிய சிங்கர் நியமநத்தால் இவ்விடம் எழுந்தருளிக் கூட்டத்தை உடனிருந்து நடத்திவைத்த ஸ்ரீ கார்யம் ஸ்வாமிக்கும், ஸபையின் சார்பில் வந்தநோபசாரம் கூறினார். ஸபை மங்களாசரணத்துடன் இனிது முற்றுப்பெற்றது.

S. R. ஸ்ரீநிவாஸன், M. V. லக்ஷ்மீநரஸிம்ஹன்,

[கார்யதர்சிகள்.]

அகில பாரத வார்ஷீய ஸநாதந வைதிக தர்ம மஹா பரிஷத், ஸைதாப்பேட்டை (சென்னை)

ஷை பரிஷத்தின் அத்யக்ஷரும், ‘தார்மீக ஹிந்து’ வின் ஸம்பாதகருமான ஸ்ரீ. உப. T. K. ஜகந்நாதாசார்ய ஸ்வாமி, நமது ஸநாதந தர்மம் வரவரத் தளர்ச்சியுற்று மெலிவது கண்டு மனமிரங்கி, ஆங்காங்கு ப்ராஹ்மணச் சிறுவர்களைக் கூட்டி, அவர்களுக்கு ஸந்த்யா வந்தநம், விஷ்ணு ஸஹஸ்ர நாமம், உபயுக்தமான வேதாத்யயநம், இவைகளைக் கற்பிக்கும்படி ஒரு ஸம்விதாநம் செய்திருக்கிறாரென்றும், ‘ஸுப்ராஹ்மண: க்ஷேமகார:’ என்று முதன்முதல் இந்த ஏற்பாடு சென்னையிலும் செங்கற்பட்டு ஜில்லாவில் சிற்சில இடங்களிலும் நடைபெறு மென்றும், பிள்ளைகளின் பெற்றோர் தமது பிள்ளைகளை ஷை பாடசாலைக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்களென்றும், ஷை பரிஷத்தின் கார்யதர்சி ஸ்ரீ. உப. V. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அறிவிக்கிறார்.

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம்॥

189254

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

மாலோல வித்வத் ஸதஸ்ஸும் ஸ்ரீ அழகிய சிங்கர் திருநக்ஷத்ரமும்

ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரால் நடத்தப்பட்டு வரும் **ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ்ஸின்** எட்டாவது வார்ஷிக மஹோத்ஸவம், இவ்வர்ஷத்தில் **திருவெவ்வுளூர் ஸ்ரீ அஹோபில மடத்தில்,** நாளது ஸர்வதாரி௵ தை ௴ 6௳ (19-1-49) புதன்கிழமை யன்று உபக்ரமிக்கப்பட்டுத் தை ௴ 15௳ (28—1—49) வெள்ளிக்கிழமை பர்யந்தம் நடைபெறும். இப்பத்து நாட்களிலும் நியத காலங்களில் மஹா வித்வான்களால் வேதாந்த ஶாஸ்த்ர விசாரமும் வாக்யார்த்த விசாரமும் பண்ணப்படும். ஸதஸ்ஸின் கடைசித் திநமான தை௴ 15௳ வெள்ளிக்கிழமை உத்திராட நக்ஷத்ரம் கூடிய சுப திநத்தில் **ஸ்ரீ அழகிய சிங்கரின் 70-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம்** திருவெவ்வுளூரிலேயே ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவருளை முன்னிட்டு நடைபெறும்.

* * * * *

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா விஷயமான ஒரு விஜ்ஞாபநம்

ஸ்ரீ அழகிய சிங்கரின் நெஞ்சமே நீணகராகக் கொண்டு எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருவருளால் நடத்தப்பட்டுவரும் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' பத்ரிகைக்கு, இப்போது 7-ஆண்டுகள் பூர்த்தியாகி 8-வது ஆண்டு தொடக்கமாகிறது. நமது ஸுஹ்ருத்துக்களாகிய சந்தாதாரரிற் பலர் சென்ற வர்ஷத்து (1948) சந்தாவை இன்னும் செலுத்தா திருக்கின்றனர். மற்றும் சில ஸுஹ்ருத்துக்கள், 1947-ம் ஆண்டுச் சந்தாவைக் கூடச் செலுத்தா திருக்கிறார்கள். ஆதலின் அவர்கள் தமது பாக்கிச் சந்தா

வைக் கூடிய சீக்ரம் செலுத்தித் தந்மூலம் பத்ரிகைக்குப் பேருதவி செய்யவேண்டு மென்று வேண்டப்படுகிறார்கள். அன்றியும், அந்தந்த வர்ஷத்துச் சந்தாத் தொகை அந்தந்த வர்ஷாரம்பத்தில் [அதாவது: வர்ஷாரம்பமான 2, 3-ஹீ காலங்களுக்குள்] செலுத்தப்பட்டு விட்டால் பேருபகாரமா யிருக்கு மென்பதையும் நமது ஸஹ்ருத் துக்களுக்கு ஸவிநயம் ஜ்ஞாபிக்கிறோம்.

* * * * *

நமது தர்மம்

முற்காலத்தில் மிகச் சிறந்தவர்களாய் விளங்கிவந்த மஹர்ஷிகளும் ஆழ்வாராசார்யர்களும் கேவலம் தமது ச்ரேயஸ்ஸை வேண்டிப் பகவானிடத்தில் பக்தி செய்தார்களே யொழிய, ஸம்ஸாரத்தில் தாபத்ரயத்தால் வருந்தும் தீந ஜநர்களுடைய நன்மையைத் தேடுவதிலோ, அவர்களுடைய ஸம்ஸார தாபங்களை நிவர்த்திப்பித்து அவர்களுக்கு ஒரு விதமான ஆறுதலைச் செய்வதிலோ, அவ்வளவாக உழைக்கவில்லை யென்று சிலர் அவர்கள்மேல் அபவாதம் கூறுகிறார்கள். இது வஸ்து ஸ்திதியை அறியாதவர்கள் வார்த்தையாகும். வஸ்துஸ்திதி என்னவென்றால் :—

நமது பெரியோர்கள், தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்ட 'ஆத்மா' என்னும் ஒரு வஸ்து உண்டென்றும், 'தேஹம் நச்வரம்; ஆத்மா ஒன்றே நிலை நிற்கும் பொருள்' என்றும் நம்பினவர்கள். புத்திமான்கள், எது சாச்வதமான பொருளோ அதன் க்ஷேமத்தைத் தேடுவதிலேயே நோக்க முள்ளவர்களாக இருப்பார்களே யொழிய, நச்வரமா யிருக்கும் பதார்த்தத்தின் க்ஷேமத்தைத் தேடுவதைப் பெரிய கார்யமாக நினைக்கமாட்டார்கள். இதனால் அவர்கள், தமது ஸஜாதீயர்களான ஜநங்கள், வ்யாதியாலோ தாரித்ர்யத்தாலோ கஷ்டப்படுவதை அநாதரவு செய்துவந்தார்க ளென்று அநுமாநம் செய்வது தவறு. இதர மதங்கள் ஸர்வஜந ஸௌஹார்த்தத்தை உயர்ந்த குணமாகப் புகழ்ந்து பேசுங்காலத்தில், நமது மதம் ஸர்வ பூத ஸௌஹார்த்தத்தையே ச்லாக்யமான குணமென்று பேசுகின்றது. அப்படிப் பேசுவதோடு நிற்காமல் இந்த ஸர்வ பூத ஸௌஹார்த்தத்தைப் பரம புருஷார்த்தத்திற்கு ஸாதநமான ஆத்ம குண மென்றும் நமது வேதாந்தங்கள் கதறுகின்றன. புராணங்களிலும் ஸர்வ பூத ஸௌஹார்த்தத்தை வற்புறுத்தும் கதைகளை ஏராளமாகக் காணலாம். ஆனால், ஸர்வ பூத ஸௌஹார்த்தத்தை இவ்வளவு ச்லாக்யமாகப் பேசுகையில், ஆத்ம வஸ்துவின் பெருமை மஹார்ஹ மென்றும், அதில் அதிக ஆதரவைச் செய்யவேண்டு மென்றும் எண்ணம் அவர்களுடைய புத்தியில் நின்றுகொண்டே யிருக்கும். ஆத்ம ஜ்ஞாநம் இராத ஒரு வ்யக்தியைப் பெரியோர்கள் ஸந்தித்தால், 'ஐயோ! இவன் ஆத்ம ச்ரேயஸ்ஸை அநாதரித்துப் போகிறானே!' என்று வருந்தி அவனுக்கு ஆத்ம

ஜ்ஞாநத்தை 'கூரவயா நிஷூரஹொ வஷெக' என்கிறபடி அவர்கள் உபதேசம் செய்ய ப்ரயத்நப்படுவார்கள். தாபத்ரயம் வருத்துங்காலத்தில், அத்யாத்மோபதேஶம் புத்தியில் ஏறமாட்டா தாகையால், அந்தத் தாபங்களை ஶமநம் செய்து கொண்டே அவர்கள் வேதாந்தோபதேஶத்தில் ப்ரவர்த்திப்பார்கள். இதனை,

" உஹஷீ அமுநம நருணாம ஞ ஹிணாம தீநவெ தஸாழ ।
நிஸ்ரெயஸாய ஹவதி நாநூயா கலூதெ க்ஷிக ॥ "

[மஹான்கள் தேஶாத்தேஶம் அலைவ தெல்லாம் ஸம்ஸாரிகளின் துக்கத்தை நிவர்த்திப்பதற்கே யொழிய வேறு காரணத்தா லன்று.] என்று புகழ்ந்து பேசப்படும் நாரத மஹர்ஷியின் சரித்திரத்தில் கண்டுகொள்ளலாம். ஆத்ம ஜ்ஞாநம் பிறந்த ஒரு பாகவதனைக் கண்டுவிட்டால் மஹான்களுடைய ஆநந்தம் அளவற்றதாகப் பெருகும். பகவானுக்குத் தாஸ்யம் செய்வதைக் காட்டிலும், பாகவதர்களுக்குத் தாஸ்யம் செய்வதே மிகப் பெரியதாகப் பேசப்பட்டிருக்கிறது.

" ஸிஜிஹவதி வா நெதி ஸம்ஶயொ உஅமூ தஸெவி நாழ ।
ந ஸம்ஶயொஉஷி தக்ஷக வரிஅபசார தா கூநாழ ॥ "

[பகவானிடத்தில் பக்தி செய்பவர்களுக்கு ஸித்தி கிடைக்குமோ கிடைக்காதோ? அந்தப் பகவானிடம் பக்தி செய்யும் பக்தர்களுக்குப் பரிசர்யை செய்யும் பாகவதர் விஷயத்தில் அம்மாதிரியான ஸம்ஶயமே யில்லை.] என்னும் ஸூக்தியே இதற்கு ப்ரமாணம். இப்படிப் பாகவத ஸேவையை உயர்த்திப் பேசுவதனாலேயே, 'இவர்கள் பாகவதர்களாக இராத ஜநங்களிடம் ஆதர வற்றவர்கள்' என்னும் அபவாதம் இவர்கள் மீது பேசப்படுகிறது. ஒன்றைப் புகழ்ந்து பேசினால் மற்றொன்று தூஷிக்கப்பட்டதாகிறது என்று தர்க்கிப்பது நல்ல தர்க்கமாமோ? இதுதான் வஸ்துஸ்திதி.

நிற்க: நமது மதத்தில் வைராக்யம் என்னும் குணம் ச்லாக்யமாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. இந்தக் குணத்தில் ஒருவிதமான ஆஸக்தியுடன் ப்ரவர்த்திப்பவர்களே பண்டை நாளில் ஏராளமாகக் காணப்பட்டார்கள். வைராக்யமானது இவ்விதம் அதிகமான ஆதரவுடன் கைப்பற்றப்பட் டிருந்தபடியால், இந்த லோகத்தில் ஸுகத்திலும் போகாநுபவத்திலும் ஜநங்களுக்கு மநஸ் அவ்வளவாக ப்ரவர்த்திக்கவில்லை. இப்படி ஒரு ப்ரகாரமாக லௌகிக ஸுகங்கள் கொஞ்சம் அநாதரிக்கப்பட்டபடியால், ப்ரஸ்துத அபவாதம் பலிஷ்டமாகத் தோன்றி யிருக்கலாம். ஸந்யாஸாதிகளுக்கு எவர்கள் அதிகாரிகளோ, அவர்கள்

மாத்ரம் வைராக்யத்தில் இறங்குவதுதான் ஶாஸ்த்ர ஸம்மதம். ஸாமாந்ய ஜநங்கள் சிலர் அதில் இறங்கித் தேர்ச்சி பெருமல் அநேக இடங்களில் ஒரு துர்த் தஶையை அடைந்துவிடுகிறபடியால், இந்த அபக்யாதி இதற்கு ஸம்பவித்தது. நமது ஶாஸ்த்ரம், நம் ஸம்ஸார தாபத்ரயத்தின் நிவ்ருத்தியைத் தேடுவதை ஓரிடத்தி லும் நிராகரித்த தில்லை. ப்ரத்யுத, அவைகளை ஶக்தி யிருக்கும்வரையில் நிவர்த் தித்துக்கொள்ள ப்ரயத்நம் செய்யவேண்டு மென்றும், அதற்கு ஸாதுவான மார்க் கம் எது வென்றும் பல விடங்களில் விளக்கிக் காட்டியிருக்கிறது. ஆகையால் நாம் நமது ஆயுள் நாளில் நமக்கு அதிகாரமா யிராத வைராக்யத்தில் மநஸ்ஸைச் செலுத்தாமல், பரஸ்பரம் நாம் இந்த லோகத்துக்கு ஸம்பந்தமான துக்க நிவ்ருத்தி யிலும் யதோசிதம் ஸுக ஸம்பாதநத்திலும் புத்தியைச் செலுத்தி, இந்த லோகத் துக் கஷ்டங்களை ஒருவாறு குறைத்துக்கொள்ள ப்ரயத்நப்படவேண்டியதுதான் நமது தர்மம். 'ലോകാസ്സമസ്താസ്സുഖിനോ ഭവന്തു'

தமிழ்நாடு … நூலகம்
189254
சென்னை 600 008